363

THE "VAKIL"—TAMIL LAW MONTHLY FOR THE PUBLIC

"வக்கீல்"

1682

363
3-49.

பொது மக்களுக்குத் தேவையான
புதிய சட்டங்களையும் கண்ட்ரோல் முதலிய
விதிகளையும் உடனுக்குடன்
விமர்சனங்களுடன்
விளக்கும்

1-5

தமிழ் மாதப் பத்திரிகை

ஆகஸ்ட் 1949

இந்த இதழில்

ஹிந்து கலப்புமணச்சட்டம்

கண்ட்ரோல்சட்டத்திருத்தம் –சிறை தண்டனையும் பறிமுதலும் கட்டாய மாக்கப்பட்டது

சென்னை ஆலயப் பிரவேச (திருத்த)ச் சட்டம்

மற்ற புதிய சட்டங்கள்

1949-50 வருமான வரி

ஷாப் சட்டம்

ஜமீன் இனும் ஒழிப்புச் சட்ட விதிகள்

விவசாய அபிவிருத்தி மசோதா

கண்ட்ரோல் உத்திரவுகள்

கேள்வியும்-பதிலும்

விபரங்கள் உள்ளே பார்க்கவும்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
... JUN 1949
MADRAS

தபால் பெட்டி நெ. 26. கும்பகோணம்.

தனிப்பிரதி அணா 4
வருட சந்தா ரூ 3

How'd you like being On mountain tops!

E W I போனிக்ஸ் பங்காக்கள் வருஷக்கணக்கில் உபத்திரவமின்றி உழைக்க உத்திரவாதமுள்ளவை. கோடைக்காலத்தை சுகமாகவும் குளிமையாகவும் கழிக்க பிரபலமான போனிக்ஸ் பங்காக்களை விட சிறந்தது வேறுகிடையாது

1949 MODEL

EWI LTD. SYMBOL OF QUALITY

PHŒNIX *Fans* AC/DC

GOVT. TESTED

Sole Distributors for Madras Presidency inclusive of all States:

RM. S. & CO. LTD., 16. BROADWAY, MADRAS-1.

கோயமுத்தூர் ஜில்லாவுக்கு விநியோகஸ்தர்கள் : **மெஸ்ஸர்ஸ் ஷண்முகம் & கோ.,** 5/106, ஜெயில் ரோடு, கோயமுத்தூர்.	தென் & வட ஆற்காடு ஜில்லாவுக்கு விநியோகஸ்தர்கள் : **மெஸ்ஸர்ஸ் குட்மேன் & கோ.,** டூப்ளே தெரு, புதுச்சேரி.
திருவாங்கூர் கொச்சி சமஸ்தானங்களுக்கு சப்-டிஸ்ட்ரிபியூட்டர்கள் : **M/s. ஸௌத் இந்தியா ஸேல்ஸ் கார்பொரேஷன்** கல்லன் ரோட், ஆலப்புழை.	தஞ்சாவூர் ஜில்லாவுக்கு சப்-டிஸ்ட்ரிபியூட்டர்கள் : **M/s. செல்வா எலக்ட்ரிக் ஸ்டோர்ஸ்** பெரிய கடைத்தெரு, கும்பகோணம்.

OFFICE OF THE REGISTRAR OF
6 - AUG 1949
MADRAS

"வக்கீல்"

பொதுமக்களுக்கான உயர்தர
மாத சட்ட வெளியீடு.

பொது மக்களுக்கான சட்ட
விஷயங்களை விளக்கும் மாதப் பத்திரிகை

மலர் 1 ஆகஸ்ட் '49 இதழ் 5

ஆசிரியர் கமிட்டி

ஸ்ரீ V. தியாகராஜன், B. A., B. L.,
,, A. பார்த்தசாரதி நாயுடு, B. A., B. L.,
,, S. சாம்பசிவய்யர், B. A., B. L.,
,, T. S. வெங்கடராமன், B. A., B. L.,
,, R. கோபாலசாமி, B. A., B. L.,
,, R. கிருஷ்ணமூர்த்தி, B. A., B. L.,
,, V. S. விஜயராகவாச்சாரி, B. A., B. L.,

பொருள் அடக்கம்

நமது சுப்ரீம் கோர்ட்	3
ஹிந்து கலப்பு மணச் சட்டம்	5
கண்ட்ரோல் சட்டத்திருத்தம்	6
பத்திரங்கள் ரிஜிஸ்டர் செய்ய வரி சர்டிபிகேட்	6
பாகிஸ்தானிலிருந்து வருவோரைக் கட்டுப்படுத்தும் சட்டம்	7
சென்னை ஆலயப் பிரவேச (திருத்த)ச் சட்டம்	7
சென்னை ஜமீன் இனம் ஒழிப்புச் சட்ட விதிகள்	8
1949-50 இன்கம் டாக்ஸ் விகிதம்	9
ஷாப் சட்டம் (தொடர்ச்சி)	10
விற்பனை வரி (தொடர்ச்சி)	15
கண்ட்ரோல்-லைசென்ஸ்-ரேஷன் விலை நிர்ணயம்-இதர சர்க்கார் அறிக்கைகள்	18
விவசாய (அபிவிருத்தி) மசோதா	22
கேள்வியும்-பதிலும்	24

"வக்கீல்"

(சந்தா விபரம்)

வருட சந்தா ... ... ரூ.	3—0—0
தனிப் பிரதி (வெளிவரும் மாதத்தில்) ...	0—4—0
முந்திய மாதப் பிரதி ...	0—6—0
வெளிநாடு வருட சந்தா ...	6—0—0

"வக்கீல்" காரியாலயம்
தபால்பெட்டி நெ. 26 :: கும்பகோணம்

சந்தாதாரர்கள் கவனிக்கவும்

1. வருட சந்தாதாரர்களாகச் சேருபவர்களுக்கு சந்தா அனுப்பும் மாதத்திலிருந்து 12 இதழ்கள் அனுப்பப்படும். முந்திய மாத இதழ்கள் தேவையானால் பிரதி 1-க்கு அணா 6 வீதம் சேர்த்து அனுப்ப வேண்டும்.

2. ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

3. சந்தாதாரர்களாகச் சேர விரும்பும் நேயர்கள் தங்கள் விலாசத்தை கொட்டை எழுத்தில் தனித்தனி எழுத்தாக எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

4. "வக்கீல்" பத்திரிகை 1949 ஸு ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. ஏப்ரல், மே, ஜுன் இதழ்கள் முழுவதும் செலவாகி விட்டபடியால் மறுபடியும் அவைகளை அச்சடித்து வருகிறோம். ஏப்ரல் பிரதி மறு அச்சாகி அனுப்பப்பட்டு வருகிறது. மே, ஜுன் பிரதிகள் இம்மாதத்தில் மறுபடி அச்சு முடிந்ததும் அவை கேட்டிருக்கும் நேயர்களுக்கு அனுப்பப்படும்.

N. கோபால்தாஸ் & கோ.,

வைரம், தங்க நகைகள், வெள்ளிப்பாத்திரங்கள்

சின்னகடைத்தெரு,
திருச்சி.



நெ. 121, பெரியதெரு,
கும்பகோணம்.

நல்ல சாமான்கள் ! **நியாயமான விலை!!**

- வைரங்களில் பழைய வெட்டுமுதல் புது வெட்டுவரையில் எல்லா ரகங்களும் ஒவ்வொருவருடைய விருப்பத்திற்கேற்றவாறு கிடைக்கும்.
- ஒவ்வொரு வைர நகை வேலைப்பாடுகளும் கிராக்கிகளுக்கு பூரண திருப்தி அளிக்குமாறு எங்கள் நேர்பார்வையிலேயே தயாரிக்கப்படுகின்றன. இத்துடன்கூட கிராக்கிகளின் ஆர்டரின்பேரில் தங்க நகைகளும் செய்துகொடுக்கிறோம்.
- சீமைக்கட்டி வெள்ளியில் செய்யப்பட்ட வெள்ளிப் பாத்திரங்கள் எல்லா மாதிரிகளிலும் எப்போதும் தயாராக இருக்கின்றன. கிராக்கிகளின் ஆர்டர்பேரிலும் வெள்ளிப் பாத்திரங்கள் செய்துகொடுக்கிறோம்.

தங்கள் மேலான ஆதரவை எப்போதும் கோருகிறோம்.

A. M. Subbaraya Chettiar & Bros.,

GENERAL MERCHANTS & TIMBER CONTRACTORS

P. B. No. 5, Telephone : **57,** Telegram : **BURMA TEAK.**

NEGAPATAM.

Branches

Madras, Kumbakonam, Tanjore & Thiruvarur.

187688

வக்கீல்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

மலர் 1 ஆகஸ்ட் 1949 இதழ் 5

சுப்ரீம் கோர்ட் - நமது மாபெரும் நீதிமன்றம்

ஆங்கிலேயர் ஆண்டுவந்த இந்தியா வேறு; இன்று நாம் குடியரசாக மாற்றி அமைத்து வரும் இந்தியா வேறு. ஆங்கிலோ - இந்தியா ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத சில பிரிட்டிஷ் மாகாணங்களையும் ஐநூறுக்கு மேற்பட்ட சுதேச சமஸ்தானங்களையும் கொண்டது. சுதந்திரமடைந்தாலும் இவைகளுக்குள் சண்டையும், குழப்பமும்தான் ஏற்படுமென்றும் மறுபடியும் தாங்கள் புகுந்துகொள்ளலாமென்றும் பகல் கனவு கண்டுவந்த பல பிரிட்டிஷார்களும் ஏமாற்றமடைய அதிக நாட்கள் பிடிக்கவில்லை. பிரிட்டிஷ் இந்தியாவை விட்டு அந்நிய ஆதிக்கம் அகன்ற அடியுடன் சமஸ்தானங்களிலிருந்தும் எதேச்சாதிகாரம் மாயமாய்ப் பறந்தோடிவிட்டது. நூற்றுக் கணக்கான சமஸ்தானங்கள் மாறியும், மறைந்தும் ஒன்றுசேர்ந்தும்விட்டன. இப்பொழுது இருக்கும் சமஸ்தானங்கள் மாகாணங்களைப் போலவே விஸ்தீர்ணமும், அந்தஸ்தும் கொண்டவைகளே. பாகிஸ்தான் பிரிந்து போனால் என்ன? எக்காலத்திலும் இருந்த இந்தியாவைவிட நம் கண்முன் பார்க்கும் இந்தியாவே பெரிதானது; ஒற்றுமையுள்ளது; வல்லமை கொண்டது.

சுதந்திரம் அடைந்த நம் நாட்டில் பொது மக்களும் சுதந்திரத்துடன் வாழ வேண்டுமானால் ஜனநாயக ஆட்சியை பலப்படுத்தப் படவேண்டும். வருங்காலத்திலும் எதேச்சாதிகாரம் எந்த இடத்திலும், எந்த வேஷத்திலும் தலைகாட்டாமலிருக்க வேண்டும். அதற்கேற்றவாறு நமது அரசியல் உறுப்புக்களை அமைத்துக்கொள்ள வேண்டும். அரசாங்கத்தை நடத்த எந்த எந்த ஸ்தாபனங்களுக்கு அல்லது அதிகாரிகளுக்கு எந்த எந்த அதிகாரங்கள் கொடுக்கப்படவேண்டுமென்று நிர்ணயம் செய்யவேண்டும், இதைத்தான் "அரசியல் நிர்ணயம்" என்று சொல்வது. நமக்காக இந்த வேலையை நமது அரசியல் நிர்ணய சபை செய்து வருகின்றது. அதன் வேலை முடிந்ததும் அச்சபை மறைந்துவிடும். ஆனால் அச்சபையால் சிருஷ்டிக்கப்பட்ட அரசியல் யந்திரம் தானாகவே வேலை செய்ய ஆரம்பித்துவிடும். இந்த அரசியல் இயந்திரத்தின் ஒவ்வொரு உறுப்பும் தன் தன் வேலையைத்தான் செய்யும். அப்படிக்கில்லாமல் ஒருவேலையைச் செய்யவேண்டிய ஸ்தாபனம் தனக்கு அதிகாரமில்லாத வேறு வேலையில் தலையிடாமல் பார்த்துக் கொண்டால்தான் ஜனநாயகம் நீடிக்கும். அப்படிப் பார்த்துக் கொள்ளும் பெரும் பொறுப்பு நமது மாபெரும் நீதி மன்றமாகிய சுப்ரீம் கோர்ட்டையும் ஹைகோர்ட்டுகளையும் சேரும்.

இதன் முக்கியத்தைப்பற்றி கவனிப்போம். ஒரு அரசாங்கம் நடை பெற மூன்று வித அதிகாரங்கள் வேண்டும் (1) சட்டம் செய்வது (2) சட்டங்களை அனுசரித்து நாட்டை நிர்வாகம் செய்வது. (3) சட்டங்கள் அனுஷ்டிக்கப்படுகின்றனவா என்று பார்த்து நீதி வழங்குவது. சட்

டங்கள் செய்ய வேண்டிய அதிகாரம் சட்ட சபைகளையும் (சில நெருக்கடியான சந்தர்ப்பங்களில் ஜனாதிபதியையும்) சேர்ந்தது. நிர்வாகம் செய்ய வேண்டியது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சர்க்கார்களும் அவர்களுக்குட்பட்ட அதிகாரிகளும், நீதி வழங்க வேண்டியது நீதிஸ்தலங்கள். இம்மூன்று அதிகாரங்களும் தனித்தனியே இருந்தால்தான் ஜனநாயகம். இவை மூன்றும் ஒரு தனி நபரிடமிருந்தால் அவருக்கு "சர்வாதிகாரி" என்று பெயர். இம்மூன்று அதிகாரமும் கொண்ட ஒரே ஸ்தாபனமும் சர்வாதிகாரம் செலுத்தும் ஸ்தாபனமாகும். இம்மூன்று அதிகாரங்களும் ஒன்று சேரும் சமயத்தில் ஜனநாயகம் மறைந்துவிடும். ஆகையால் அந்த ஸ்தாபனங்களும் சட்ட சபைகளும் சர்க்கார் அதிகாரிகளும் சட்டங்களுக்குட்பட்டு தங்கள் தங்கள் அதிகார எல்லைக்குள் வேலை செய்து வருகின்றனரா என்று கண்கொட்டாமல் நமது நீதி ஸ்தலங்கள்தான் பார்த்துக் கொள்ள வேண்டும். இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் பல பல கட்சிகள் இருந்தாலும் ஜனநாயகம் நீடிப்பதற்குக் காரணம் அத்தேசங்களிலுள்ள நீதி ஸ்தலங்களே.

இச்சட்டத்தை இயற்ற இந்த மாகாண சட்ட சபைக்கு அதிகாரமில்லையே; இந்த வரியைப் போட இந்த சர்க்காருக்கு சட்டம் இல்லையே; என்று அவைகளால் பாதிக்கப்பட்ட ஒரு தனி நபர் சொல்லும் கட்சியைக் கேட்டு நமது நீதி ஸ்தலங்கள் முடிவு செய்யலாம். அப்படிச் செய்வதற்கு நீதி ஸ்தலங்கள் வேறு எந்த நிர்வாக அதிகாரிகளுக்கும் உட்பட்டவையாக இருக்கக் கூடாது.

இந்த அடிப்படையான கொள்கையை லட்சியமாக வைத்துக் கொண்டுதான் அரசியல் நிர்ணயசபை நீதி நிர்வாகப் பிரிவினையை வற்புறுத்தி இருப்பதுடன் மிக சக்தி வாய்ந்த சுப்ரீம் கோர்ட்டையும் ஏற்படுத்தி இருக்கின்றது. அகில இந்தியாவுக்கும், எல்லா ஹைக்கோர்ட்டுகளுக்கும் மேலாக ஒரு சுப்ரீம் கோர்ட் இருக்கும். அதில் பிரதம நீதிபதியும் குறைந்தது ஏழு நீதிபதிகளும் இருப்பார்கள். பிரதம நீதிபதியை குடியரசுத் தலைவர் நியமிப்பார். பிரதம நீதிபதியைக் கலந்துகொண்டு மற்ற நீதிபதிகளையும் அவரே நியமிப்பார். நீதிபதிகளை நியமித்தபிறகு அவர்களை விலக்குவது சாதாரணமாக முடியாது. ஒழுங்கீனமான நடத்தை அல்லது திறமையின்மை காரணமாக ஒரு நீதிபதியை விலக்கவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டால், இந்திய பார்லிமெண்டிலும், மேல் சபையிலும் ஆஜராகியுள்ள அங்கத்தினர்களில் மூன்றில் இரண்டு பங்கு பேர்கள் ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும். அதன் பிறகுதான் அந்த நீதிபதியை விலக்க ஜனாதிபதிக்கு அதிகாரம். ஒருவருக்கும் தயவு தாட்சண்ணியமின்றி நீதிபதிகள் நீதி வழங்கும் பொருட்டே இவ்விதம் விதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. நமது சுப்ரீம் கோர்ட்டுக்கு ஏராள அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஹைக்கோர்ட்டுகளின் தீர்ப்புகளை ஆட்சேபித்து சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்யலாம். முக்கியமான சட்ட விஷயங்களில் ஜனாதிபதி சுப்ரீம் கோர்ட்டின் அபிப்பிராயத்தைக் கேட்கலாம். இந்தியாவிலுள்ள எல்லா கோர்ட்டுகளும் சுப்ரீம் கோர்ட்டுக்குட்பட்டவையாகும்.

சென்னையில் நீதி நிர்வாகப் பிரிவினை: சில ஜில்லாக்களில் நீதி நிர்வாகப் பிரிவினையை உடனே அமுலுக்குக் கொண்டு வருவதாய் சென்னை சர்க்கார் தீர்மானித்திருக்கின்றனர். நீதி நிர்வாகப் பிரிவினை அமுலுக்கு வரும் இடங்களில் ஜில்லா கலெக்டர் வேறு, ஜில்லா மாஜிஸ்ட்ரேட் வேறாக இருப்பார்கள். இப்பொழுது ரிவன்யூ நிர்வாக அதிகாரத்தையும், கிரிமினல் கோர்ட் அதிகாரத்தையும் சேர்த்து செலுத்திவரும் சப் கலெக்டர்கள், டிப்டி கலெக்டர்கள், டிப்டி தாசில்தார்கள் இவர்கள் மறைவார்கள். இந்த அதிகாரங்கள் பிரிக்கப்பட்டு தனித்தனி அதிகாரிகளிடம் கொடுக்கப்படும்.

புதிய சட்டங்கள்

ஹிந்து கலப்பு மணச் சட்டம்

ஹிந்து (லா) சட்டப்படி மணம் செய்து கொள்பவர்கள் இருவரும் ஒரே வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருந்தால்தான் அது செல்லும். மேலும் ஒரு ஹிந்துவும் ஒரு சீக்கிய அல்லது ஜெயின மதத்தைச் சேர்ந்தவரும் செய்துகொள்ளும் திருமணமும் செல்லாது. அதாவது அவர்கள் மதாசாரப்படி மணம் செய்துகொண்டால் செல்லாது. ஹிந்துவாக இருந்தாலும் வெவ்வேறு வகுப்பைச் சேர்ந்த இருவர் மணம் செய்துகொள்ள விரும்பினாலும், ஒருவர் ஹிந்துவாகவும் மற்றொருவர் ஜெயினர் அல்லது சீக்கியராக இருந்தாலும் அவர்கள் விசேஷ விவாகச் சட்டப்படி (ஸ்பெஷல் மாரியேஜ் ஆக்ட்) 'ரிஜிஸ்டர் மாரியேஜ்' என்று வழங்கப்படும் பதிவு மணம் செய்து கொள்ளலாம். பதிவு மணம் செய்து கொண்டால்தான் செல்லும். ஆனால், அச்சட்டப்படி பதிவு மணம் செய்து கொள்வதில்சில இடைஞ்சல்கள் இருக்கின்றன. உதாரணமாய் பதிவு மணம் செய்து கொள்பவர்கள் சுவீகாரம் செய்துகொள்ள முடியாது. பதிவு மணம் செய்துகொள்ளும் ஒரு ஹிந்துவின் தகப்பனாருக்கு அவர் ஒரே மகனாக இருந்தால், அத்தகப்பனார் வேறு ஒருவரை சுவீகாரம் செய்துகொள்ளலாம். மேலும் பதிவு மணம் செய்துகொள்பவர்களுக்கு வார்சுகள் ஹிந்து (லா) சட்டப்படி இல்லை. இந்திய வார்சு சட்டப்படிதான். இச்சட்டங்களை நிவர்த்தி செய்யவே ஒரு புது மத்திய சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இப்புது சட்டத்தில் 'ஹிந்து' என்றால் அதில் 'ஜெயினரும்' 'சீக்கியரும்' சேர்ந்தவர்களே. இப்புதுச்சட்டப்படி ஹிந்துகளுக்குள் மணம் செய்துகொள்ளும் மணமகனும், மணமகளும் வெவ்வேறு மதம் அல்லது வகுப்பு அல்லது வெவ்வேறு உட்பிரிவைச் சேர்ந்தவர்களாக இருப்பினும் அவர்கள் சாதாரணமாய்ச் செய்துகொள்ளும் திருமணங்களும் இனி செல்லும். இவ்வித திருமணங்கள் ஏற்கனவே ஏற்பட்டிருந்தாலும் அவைகளும் செல்லுபடியுள்ளதே. இவர்கள் இனி பதிவு மணம் செய்துகொள்ள வேண்டிய அவசியமில்லை.

(16—4—1949 விசேஷ இந்திய சர்க்கார் கெஜட்)

சினிமா சட்டத் திருத்தம்

(மத்திய சட்டம் 1949-ம் வருடத்திய 39-வது ஆக்ட்) ஒவ்வொரு சினிமாப் படமும், பொதுஜனங்களுக்குக் காண்பிக்கப்படு முன், சர்க்காரால் நியமிக்கப்பட்டிருக்கும் ஒரு தணிக்கை போர்டாரிடம் காண்பிக்கப்பட்டு அவர்களுடைய அங்கீகாரப் பத்திரம் (சர்டிபிகேட்) பெற்றிருக்கவேண்டும். படம் ஆட்சேபிக்கத் தக்கதாய் இருந்தால் இப்போர்டார் சர்டிபிகேட் கொடுக்கமறுக்கலாம். ஆனால், ஒரு படத்திற்கு சர்டிபிகேட் கொடுத்துவிட்டால் அப்படத்தை எவரும் பார்க்கலாம். சில படங்களை பாலிய வயதுள்ளவர்கள் பார்ப்பதால் வளரும் கெடுதியைத் தடுக்க மத்திய சர்க்கார் பழைய சினிமாச் சட்டத்தில் ஒரு திருத்தம் கொண்டுவந்து அதைச் சட்டமாகச் செய்திருக்கிறார்கள். இத்திருத்தச் சட்டப்படி இனி காட்சிக்கு லாயக்குள்ள சினிமாப் படங்கள் இரண்டு வகையாகப் பிரிக்கப்படும். யாவரும் பார்க்கக்கூடிய படங்களுக்கு 'யு' (U) சர்டிபிகேட் என்று கொடுக்கப்படும். 18 வயது பூர்த்தி ஆனவர்கள் மட்டில் பார்க்கக்கூடிய படங்களுக்கு 'எ' (A) சர்டிபிகேட் என்று கொடுக்கப்

படும். 'ஏ' சர்டிபிகேட் படங்களை 18 வயது பூர்த்தி ஆனவர்கள் மட்டில்தான் பார்க்கலாம். ஆனால், இவர்கள் 3 வயது பூர்த்தியாகாத கைக்குழந்தைகளைக்கூட அழைத்துச் செல்லலாம். இவ்விதம் 'ஏ' சர்டிபிகேட் கொடுத்தது தவறு என்று பட முதலாளிக்குத்தோன்றினால் அவர் மாகாண சர்க்காருக்கு அப்பீல் செய்யலாம். இச் சட்டம் அமுலுக்கு வரும் தேதியை மத்திய சர்க்கார் குறிப்பிட்டு கெஜட்டில் பிரசுரம் செய்வார்கள்.

அத்தியாவசியப்பொருள் கட்டுப்பாடு (கண்ட்ரோல்) சட்டத் திருத்தம்

சிறை தண்டனையும் பறிமுதலும் கட்டாயமாக்கப்பட்டது

(மத்திய சட்டம். 1949-ம் வருடத்திய 19-வது ஆக்ட்) சில அத்தியாவசியமான சாமான்களின் உற்பத்தி, விநியோகம், விலை இவைகளை கட்டுப்படுத்த (கண்ட்ரோல் செய்ய) ஏற்பட்டிருக்கும் 1946-ம் வருடத்திய 24-வது ஆக்ட்டில் சில முக்கிய திருத்தங்கள், இத்திருத்தச் சட்டத்தின் மூலம், செய்யப்பட்டிருக்கின்றன. அதாவது:—(1) உணவு தானியங்களைப்பற்றிய கட்டுப்பாடு விதிகளை மீறிய குற்றத்திற்கு தண்டனை விதிக்கும் நீதிபதி இனி அவசியமாய் குற்றவாளிக்கு சிறைவாச தண்டனை விதித்தே தீரவேண்டும். சிறை தண்டனை மூன்று வருடம் வரை இருக்கலாம். அத்துடன் அபராதமும் போடலாம். அபராதம் மட்டில் விதிப்பதே போதுமென்று நீதிபதிக்குத் தோன்றினால் அதன் காரணங்களை வியக்தமாய் தீர்ப்பில் எழுதி அபராதம் மட்டில் போடலாம். (2) மேலும் எந்த உணவு தானிய சம்பந்தமாய் குற்றம் செய்யப்பட்டதோ அத்தானியத்தை, ஜாடாவுமோ, ஒரு பாகத்தையோ, சர்க்காருக்கு கட்டாயமாய் பறிமுதல் செய்யவேண்டும். அப்படிப் பறிமுதல் செய்யவேண்டிய அவசியமில்லை என்று கோர்ட்டுக்குத் தோன்றினால் அதற்குள்ள காரணங்களையும் தீர்ப்பில் எழுத வேண்டும். (3) ஜவுளி அல்லது உணவு தானிய சம்பந்தமாய் குற்றம் செய்யப்பட்டிருந்து, இவை சர்க்காருக்கு பறிமுதல் செய்யப்பட வேண்டியவையாக இருந்தால், அத்துடன் கூட ஜவுளி அல்லது உணவு தானியங்களை கட்டியிருந்த சாக்கு, துணி, பெட்டி முதலிய எவ்வகை சாமான்களும், அவைகளை ஏற்றிச் சென்ற வண்டிகள் (மோட்டார் வண்டிகள் உள்பட) மாடு, குதிரை, படகு முதலியவற்றையும் சர்க்காருக்கு பறிமுதல் செய்யும்படி நீதிபதி உத்திரவு செய்யலாம். ஆனால் இவைகளின் சொந்தக்காரர்களுக்கு இவ்விதம் குற்றம் செய்வதற்காக தன்னுடைய சாமான்களை உபயோகப்படுத்தப்படும் என்றாவது அல்லது உபயோகப் படுத்தக் கூடுமென்றாவது தெரிந்திருக்கவேண்டும். அப்படி அவர்களுக்கு தெரிந்ததாக ருசுவில்லாவிட்டால் மேற்கண்ட வண்டி முதலிய சாமான்களை பறிமுதல் செய்ய உத்திரவு செய்யக் கூடாது. (இதே ஷரத்துக்களைக்கொண்ட மேன்மை தங்கிய கவர்னர் ஜெனரல் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட ஆர்டினன்ஸ் என்ற அவசரச் சட்டம் இத்திருத்தச்சட்டத்தின் மூலம் ரத்து செய்யப்பட்டிருக்கிறது.)

பத்திரங்கள் ரிஜிஸ்டர்செய்யுமுன் வரி சர்டிபிகேட் கேட்க சட்டம்

(மத்திய சட்டம். 1949-ம் வருடத்திய 22-வது ஆக்ட்) இது சம்பந்தமாய் மே. த. கவர்னர் ஜெனரல் அவர்கள் ஒரு அவசரச் சட்டம் (ஆர்டினன்ஸ்) பிறப்பித்து அது சில மாதங்கள் சென்னை மாகாணத்திலும் அமுலில் இருந்தது. அதாவது விவசாய நிலமல்லாத மற்ற எந்த சொத்துக்களைப் பொறுத்தும் ஏற்படும் கிரயம், ஒத்தி, பெந்தகம், பரிவர்த்தனை முதலிய எவ்வித பத்திரங்களையும் ரிஜிஸ்டர் செய்யுமுன், அப்பத்திரங்களை எழுதிக் கொடுத்தவர் சர்க்காருக்கு வருமான வரி (இன்கம் டாக்ஸ்) முதலிய வரிகள் கொடுக்க வேண்டியதில்லை அல்லது பாக்கி இல்லை என்று வரி அதிகாரிகளிடமிருந்து சர்டிபிகேட் வாங்கி தாக்கல் செய்தால்தான் பத்திரங்கள் ரிஜிஸ்டர் செய்யப்படும் என்று இருந்தது. அவசரச் சட்டங்கள் (ஆர்டி

னன்ஸ்) ஆறு மாதம்தான் அமுலில் இருக்கும். ஆகையால் அதே விஷயங்களுக்கு இப்பொழுது இந்திய பார்லிமெண்டில் இப்புதுச் சட்டம் பல மாறுதல்களுடன் இயற்றப்பட்டிருக்கிறது. அவசரச் சட்டப்படி யார் பத்திரம் எழுதிக் கொடுத்தாலும் வரி சர்டிபிகேட் வேண்டும். இப்புது சட்டப்படி அது இல்லை. இப்புதுச் சட்டம் சிலருக்கே. அதாவது பாகிஸ்தான் ஏற்பட்ட பிறகு (14—8—1947-க்குப் பிறகு) அதன் காரணமாகவோ உள்நாட்டு குழப்பத்தின் காரணமாகவோ அதற்கு பயந்தோ, இந்தியாவை விட்டு வெளியே வசித்து வருபவர்களுக்கும், அப்படிச் செய்ய உத்தேசித்திருப்பவர் என்று வரி அதிகாரி, கலெக்டர் அல்லது அகதி அதிகாரியால் குறிப்பிடப்படும் நபர்களுக்கும்தான் இச்சட்டம் அனுஷ்டிக்கப்படும். அவர்கள் எழுதிக் கொடுக்கும் பத்திரங்களை ரிஜிஸ்டர் செய்யுமுன், எழுதிக் கொடுத்தவர் சர்க்காருக்கு யாதொரு வருமான வரியாவது, ஸூபர் முதலிய வரியாவது கொடுக்கவேண்டியவர் அல்ல என்றாவது அல்லது வரி பாக்கி இல்லை என்றாவது இன்கம் டாக்ஸ் ஆபீசரிடமிருந்து சர்டிபிகேட் தாக்கல் செய்தாலொழிய அவர்களுடைய பத்திரங்கள் ரிஜிஸ்டர் செய்யப்படமாட்டாது. இவர்களைத்தவிர மற்றவர்களுக்கு இச்சட்டம் கிடையாது.

பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கு வருவோரைக் கட்டுப்படுத்தும் சட்டம்

(மத்திய சட்டம் 1949-ம் வருடத்திய 23-வது ஆக்ட்) பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கு வருபவர்கள் இந்திய சர்க்கார் அதிகாரிகளிடம் (பர்மிட்) அனுமதிச் சீட்டு வாங்கிக் கொண்டுதான் வரவேண்டுமென்றும், அப்படி பர்மிட்டுடன் வருபவர்களுடைய போக்கு வரத்தைக் கட்டுப்படுத்தவும் இச்சட்டம் ஏற்பட்டிருக்கிறது. பர்மிட் இல்லாமல் பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கு வந்தாலும், பர்மிட்டில் கண்ட நிபந்தனைகளை மீறினாலும் குற்றமாகும். ஒரு வருடம் வரை சிறைவாசமும், ரூபாய் 1000 வரை அபராதமும் விதிக்கப்படலாம். பர்மிட் வழங்கவேண்டிய அதிகாரிகள், பர்மிட் கொடுக்கப்பட்டவர்கள் இந்தியாவிலிருக்கும்போது நடந்து கொள்ளவேண்டிய முறை, பர்மிட் இல்லாமல் யார் வரலாம் என்ற விஷயங்களைக் குறித்து சர்க்கார் விதிகள் செய்யலாம்.

சென்னை ஆலயப் பிரவேச (திருத்த)ச் சட்டம்

(சென்னைச் சட்டம் 1949-ம் வருடத்திய 13-வது ஆக்ட்) 1947-ல் நிறைவேற்றப்பட்ட ஆலயப்பிரவேசச் சட்டத்தில் இரண்டொரு வார்த்தைகள் விட்டுப்போயின. அதாவது "ஆலயம்" என்ற சொல்லுக்கு "பொதுவாக ஹிந்து சமூகத்தாருக்கு அர்ப்பணம் செய்யப்பட்டிருக்கும் பொதுவான சமய வழிபாட்டுக்குரிய இடம்" என்று அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வித ஆலயங்களில் அதுவரை தடுக்கப்பட்ட ஹரிஜனங்கள் முதலியோர் பிரவேசிக்க வழிபாடு செய்ய சட்டம் உரிமை அளித்தது. ஆனால் "பொதுவாக" ஹிந்து சமூகத்தாருக்கு அல்லாமல் ஹிந்து சமூகத்தைச் சேர்ந்த "குறிப்பிட்ட பிரிவினருக்கு" என்று கட்டப்பட்ட ஆலயங்களுக்கு அச்சட்டம் பொருந்தாது என்றும் அவைகளில் ஹரிஜனங்களுக்கு பிரவேசிக்க சட்டத்தில் இடமில்லை என்றும் சில ஆட்சேபணைகள் கிளம்பின. அச்சந்தேகங்களை நிவர்த்தி செய்யும் பொருட்டு இத்திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இத்திருத்தச் சட்டப்படி "ஆலயம்" என்ற சொல்லுக்கு "பொதுவாக ஹிந்து சமூகத்தினருக்கோ அல்லது அவர்களில் ஒரு பிரிவினருக்கோ அர்ப்பணம் செய்யப்பட்டவை" என்று அர்த்தத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. இனி ஒரு பிரிவினர் மட்டும் பாத்தியம் கொண்டாடும் ஆலயங்களிலும் ஹரிஜனங்கள் பிரவேசிக்க உரிமை உண்டு.

மேலும் ஆலயப் பிரவேசச் சட்டத்தின் கீழ் ஏற்படும் குற்றங்களுக்காக குற்றம் செய்தவர்களை வாரண்டில்லாமலே போலீசார் அரஸ்ட் செய்யும் அதிகாரமும், கொடுக்கப்பட்டிருக்கிறது.

(28—6—49 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் IV B பக்கம் 115)

சென்னை ஜமீன் இனாம் ஒழிப்புச் சட்ட விதிகள்

(குறிப்பு: சமீபத்தில் சட்டமான சென்னை ஜமீன் இனாம் ஒழிப்புச் சட்டத்தின் எல்லா முக்கிய அம்சங்களும் "வக்கீல்" ஜூன் இதழிலும் ஜூலை இதழிலும் வெகு விரிவாக சொல்லப்பட்டிருக்கிறது. இச்சட்டத்தில் பல விஷயங்களைக் குறித்து விதிகள் செய்ய சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சர்க்கார் அடிக்கடி விதிகள் (ரூல்கள்) செய்துவருவார்கள். அவ்விதிகளைப்பற்றியும் அவ்வப்பொழுது "வக்கீல்" பத்திரிகையில் தெரிந்துகொள்ளலாம்).

ஜமீன் இனாம் ஒழிப்புச் சட்டப்படி ஒரு இனாம் கிராமம் இச்சட்டப்படி திறப்பாக மாற்றப்பட வேண்டியதா இல்லையா என்று செட்டில்மெண்ட் ஆபீசர்தான் முதலில் முடிவுசெய்ய வேண்டுமென்று ஷை சட்டம் 9-வது செக்ஷனில் சொல்லப்பட்டிருப்பதைக் குறித்து சர்க்காரால் சில விதிகள் (ரூல்கள்) செய்யப்பட்டிருக்கின்றன. அவை விபரம்.

செட்டில்மெண்ட் ஆபீசருக்கு மனு எழுத்துமூலம் இருக்கவேண்டும். மனுவில் மனுதார் உறுதிமொழியுடன் கையெழுத்து செய்திருக்கவேண்டும். மனுவுக்கு கோர்ட் பீசு ஸ்டாம்பு அணா 12 ஒட்டவேண்டும். ஒவ்வொரு மனுவும் ஒரே இனாம் கிராமத்தைப்பற்றித்தான் இருக்கவேண்டும். ரயத்துக்களால் போடப்படும் மனுவில் இனாம்தாரையும் எதிர்மனுதாரராகச் சேர்த்திருக்க வேண்டும். மனுவில் இருக்க வேண்டிய விஷயங்கள்: (a) இனாம் கிராமத்தின் பெயர். (b) மனுதார் பெயர். (c) மனுதார் இனாம்தாரா அல்லவா. (d) இனாம்தார் இல்லாவிட்டால் அந்த கிராமத்தில் மனுதாருக்குள்ள பாத்தியம். (e) மனுதார் ஷை கிராமம் ஜமீன் இனாம் ஒழிப்புச் சட்டப்படி திறப்பாக மாற்றப்பட வேண்டியதென்று கேட்கிறாரா அல்லது கூடாது என்று சொல்லுகிறாரா என்றும் மனுதார் தான் சொல்லும் கக்ஷிக்கு என்ன ருசுவிடப்போகிறார் என்பதும் கண்டிருக்க வேண்டும்.

இந்த மனுவைப் பெற்றுக் கொள்ளும் செட்டில்மெண்ட் ஆபீசர் அதை விசாரணை செய்ய தேதி குறிப்பிடுவார். இதை கிராமத்தின் சாவடியிலோ வேறு பகிரங்கமான இடத்திலோ பிரசுரம் செய்வதுடன், கிராமத்தில் விசாரணைத் தேதி தண்டோரா மூலமும் தெரிவிக்கப்படும். செட்டில்மெண்ட் ஆபீசருடைய ஆபீஸில் உள்ள நோட்டீஸ் போர்டிலும் நோட்டீஸ் ஒட்டப்படும். மனுதாருக்கும், இனாம்தாருக்கும் விசாரணைத்தேதி நோட்டீஸ், தாலூக்கா ஆபீசு மூலமாகவோ அது முடியாவிட்டால் ரிஜிஸ்டர் தபால் மூலமாகவோ அனுப்பப்படும். (நோட்டீசின் வாசகம் எப்படி இருக்க வேண்டுமென்றும் ரூல்களில் சொல்லப்பட்டிருக்கிறது.) இவ்விதம் தேதி குறிப்பிட்ட நோட்டீஸ் நகல் ஒன்று ஜில்லா கலெக்டருக்கும் அனுப்பப்படும். அந்த இனாம் கிராம சம்பந்தமாய் சர்க்கார் வசமுள்ள தஸ்தாவேஜிகளை கலெக்டர் ஒரு பொறுப்புள்ள ரிவின்யூ உத்தியோகஸ்தர் மூலம் செட்டில்மெண்ட் ஆபீசர் விசாரணை காலத்தில் தாக்கல் செய்வார். செட்டில்மெண்ட் ஆபீசர் அந்த கிராமம் இந்த ஒழிப்புச் சட்டத்தின் கீழ் வரக்கூடியதா இல்லையா என்று விசாரணை செய்து தீர்ப்புச் செய்வார். அவருடைய தீர்ப்பும் மேலே கண்ட பிரகாரம் கிராமத்திலும் பிரசுரம் செய்யப்படும். (அதன் பேரில் டிரிபுனல் சபைக்கு அப்பீல் உண்டு.) அப்பீல் மனுவுக்கு ஸ்டாம்பு ரூ. 2/-ஒட்ட வேண்டும். அப்பீல் மனுவுடன் செட்டில்மெண்ட் ஆபீசர் செய்த தீர்ப்பின் நகல் தாக்கல் செய்யப்படவேண்டும். அப்பீல் மனுவுக்கு விசாரணைத்தேதி குறிப்பிட்டு மேற்கண்டபடி கிராமத்திலும் பிரசுரம் செய்யப்படும்.

(இவ்விதமே ஜமீன்களில் உள்ள அண்டர்டென்யூர் எஸ்டேட்களைப்பற்றியும் விசாரணை விஷயமாயும் விதிகள் செய்யப்பட்டிருக்கின்றன.)

(5—7—49-சென்னை சர்க்கார் கெஜட் பாகம் V
ரூல் சப்ளிமெண்ட் பக்கம் 207)

1949 - 50 வருமான வரி விகிதம்
(இன்கம் டாக்ஸ்)

(மத்திய சட்டம் 1949-ம் வருடத்திய 14-வது ஆக்ட்)

1—4—1949 முதல் *31—3—1950* வரை உள்ள வருடத்தில் அடியில் கண்டபடி வருமான வரி (இன்கம் டாக்ஸ்) விதிக்கப்படும். (வருமானவரிஎப்பொழுதும் முந்திய வருடத்திய வரும்படிக்கு அடுத்த வருடம் விதிக்கப்படும். உதாரணமாய் *31—3—1949* உடன் முடியும் ஒரு வருடத்தில் ஒருவர் அடையும் மொத்த வரும்படிக்கு *1—4—49* முதல் *31—3—50* முடிய உள்ள *1949-50* என்ற சர்க்கார் கணக்கு வருடத்தில் அவருக்கு வரி விதிக்கப்படும். ஒவ்வொரு வருடத்திலும் வரி விகிதத்தை நிர்ணயம் செய்யவும் எத்தனை ரூபாய்க்கு மேல்த்தான் வரி கொடுக்க வேண்டுமென்று நிச்சயம் செய்யவும் மத்திய சர்க்காரால் சட்டம் இயற்றப்பட்டு வருகிறது.)

முந்திய வருடத்தில் ரூ. 5000/-க்கு மேல் வருமானம் இல்லாத ஹிந்து (அவிபக்த) பிரிபடாத குடும்பத்திற்கு இவ்வருடம் (1949-50) யாதொரு வருமான வரியும் கிடையாது. ஆனால் அக்குடும்பத்தில் 18 வயது பூர்த்தியான குறைந்தது இரண்டு பாகஸ்தர்களாவது இருக்கவேண்டும்; அல்லது பாகஸ்தர்கள் அப்படி 18 வயது பூர்த்தியாகாதவர்களாக இருந்தால் ஒரே கிளையில் உள்ளவராக இல்லாமல் (அதாவது ஒருவரும் அவருடைய மைனர் மகன் அல்லது பேரன் இப்படி இல்லாமல்) வெவ்வேறு கிளையில் உள்ளவராக இருவராவது இருக்க வேண்டும்.

மற்றவர்களுக்கு, அதாவது தனிப்பட்ட நபர்கள், கூட்டு வியாபாரம் செய்வோர் முதலியவர்களுக்கு முந்திய வருடத்தில் ரூ. 3000/-க்கு மேல் வருமானம் இல்லாமல் இருந்தால் இவ்வருடம் (1949-50) வருமான வரி கிடையாது.

மேற்கண்ட தொகைகளுக்கு மேல் வருட வருமானமிருந்தால் அடியில் கண்டபடி 1949-50 ல் இன்கம் டாக்ஸ் கொடுக்க வேண்டும்.

மொத்த வருமானத்தில்		வரி விகிதம் (ரூ. 1-க்கு வரி)
1.	முதல் ரூ. 1500-க்கு	வரி கிடையாது.
2.	அடுத்த 3500 ,,	0 0 9
3.	அடுத்த 5000 ,,	0 1 9
4.	அடுத்த 5000 ,,	0 3 6
5.	அதற்கு மேல் உள்ள ஜாடா தொகைக்கும்	0 5 0

வருமான வரி தவிர (சூபர் டாக்ஸ்) அமித வருமான வரி கொடுக்க வேண்டியவர்கள் அடியில் கண்ட விகிதப்படி சூபர் டாக்ஸ் கொடுக்கவேண்டும்.

சூபர் டாக்ஸ் விகிதம்
(ரூ. 1-க்கு வரி)

மொத்த வருமானத்தில்	சம்பாதிக்கப்பட்ட வருமானமாக இருந்தால்	சம்பாதிக்கப்படாமல் கிடைக்கும் வருமானமாக இருந்தால்
1. முதல் ரூ. 25,000	வரி கிடையாது	வரி கிடையாது
2. அடுத்த ரூ. 15,000-க்கும்	0 2 0	0 3 0
3. அடுத்த ரூ. 15,000-க்கும்	0 3 0	0 4 6
4. அடுத்த ரூ. 15,000-க்கும்	0 5 0	0 6 0
5. அடுத்த ரூ. 15,000-க்கும்	0 6 0	0 7 0

ஷாப் சட்டம்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

(V. தியாகராஜன் B. A., B. L.,)

[ஷாப் சட்டத்தின் எல்லா முக்கிய அம்சங்களையும் "வக்கீல்" மே-மீ இதழ்முதல் கேள்வி-பதில் என்ற நடையில் எழுதி வருகிறோம். மே-மீ இதழில், ஷாப் சட்டத்திற்கு உட்பட்டவர்கள் யார்; கடை முதலிய ஸ்தாபனங்கள் திறத்து மூடும் நேரம்; வார விடுமுறை; சிப்பந்தியின் வயது; சிப்பந்திகளின் தினசரிவேலை நேரம் இவ்விஷயங்கள் சொல்லப்பட்டன. ஜூன்-மீ இதழில் சிப்பந்தியின் வருடாந்திர விடுமுறை நாட்கள், சிப்பந்தியின் சம்பளம் இவைகளைப் பற்றியும். ஜூலை-மீ இதழில் அபராதம் முதலிய சம்பளப் பிடித்தம், அட்வான்சு, சிப்பந்தியை வேலையிலிருந்து நீக்கலாமா என்ற விஷயங்களைப் பற்றியும் விபரமாய் சொல்லப்பட்டன.]

சுகாதாரம்

கேள்வி: கடைகள் இன்னும் மற்ற ஸ்தாபனங்களைப் பொறுத்தும் சுகாதார விஷயமாய் ஷாப் சட்டதில் என்ன விதிகள் இருக்கின்றன?

பதில்: சிப்பந்திகளின் நிலையை உயர்த்தவே ஷாப் சட்டம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறபடியால் சிப்பந்திகள் வேலை செய்யும் இடங்களும் சுகாதாரத்திற்கு ஏற்றவையாக இருக்க பல விதிகள் இருக்கின்றன. எந்தக் கடை அல்லது வேறு ஸ்தாபனமாவது இவ் விதிகளுக்கு முரணாக இருப்பதாக ஷாப் இன்ஸ்பெக்டருக்குத் தோன்றினால் அவர் அந்த ஸ்தாபனத்தின் முதலாளி ஒரு குறிப்பிட்ட தேதிக்குள் என்ன என்ன செய்ய வேண்டுமென்று ஒரு உத்திரவு பிறப்பிப்பார். அதன்படி முதலாளி செய்யாமலிருப்பதும் ஒரு குற்றமாகும். [22-(2)-45]

கேள்வி: இன்ஸ்பெக்டர் இவ்விஷயமாய் செய்திருக்கும் உத்திரவு சரியல்ல என்று ஒரு முதலாளிக்குத் தோன்றினால் அவர் என்ன செய்வது?

பதில்: முதலாளி லேபர் கமிஷனருக்கு அப்பீல் செய்யலாம். இன்ஸ்பெக்டருடைய உத்திரவு தனக்கு கிடைத்த 30 தினங்களுக்குள் அப்பீல் மனுக்கொடுக்கவேண்டும். லேபர் கமிஷனர் செய்யும் உத்திரவே முடிவானது.

கேள்வி: சுகாதார சம்பந்தமாய் அனுஷ்டிக்கப்படவேண்டிய முக்கிய விதிகள் என்ன?

பதில்: கடைகள் உள்பட எல்லா ஸ்தாபனங்கள் நடத்தப்படும் கட்டடங்கள், அறைகள் முதலியவை யாவும் (1) நல்ல வெளிச்சத்துடனும் (2) நல்ல காற்றுடனும் (3) துர்நாற்றம் இல்லாத சாக்கடை கக்கூஸ்

(9-பக்கத் தொடர்ச்சி)

6.	அடுத்த ரூ. 15,000-க்கும்	0 6 6	0 8 0
7.	அடுத்த ரூ. 50,000-க்கும்	0 7 0	0 9 0
8.	அடுத்த ரூ. 1,00,000 - க்கும்	0 8 0	0 9 6
9.	அடுத்த ரூ. 1,00,000 - க்கும்	0 8 6	0 10 0
10.	அதற்கு மேல் உள்ள ஜாடா தொகைக்கும்	0 9 0	0 10 0

(கம்பெனிகளுக்கும், ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் வருமான வரி, சூபர் டாக்ஸ் விகிதங்கள் வேறு.)

[ ] இந்தப் பிராக்கட்டுக்குள் இருக்கும் எண்கள் சட்டத்தின் செக்ஷனைக் குறிக்கும்

முதலியவைகளுடனும் சுகாதாரத்திற்கேற்றபடி இருக்கவேண்டும். இந்த மூன்று அடிப்படையான விஷயங்களை வற்புறுத்தவே விதிகள் இருக்கின்றன. [20, 21, 22].

கேள்வி: நல்ல காற்று வெளிச்சம் இருக்க முதலாளி என்ன செய்யவேண்டும்?

பதில்: ஒரு சிப்பந்தி வேலை செய்யும் அறையில் எப்பொழுதும் நல்ல காற்று உள்ளே வந்து கொண்டிருக்கும்படி 5 சதுர அடி பரப்பு விகிதம் ஜன்னல்கள் இருக்க வேண்டும். உதாரணமாக, நான்கு சிப்பந்திகள் வேலை செய்யுமிடத்தில் இருக்கும் ஜன்னல்களின் மொத்தப்பரப்பு அல்லது இடைவெளி ($4 \times 5 =$) 20 சதுர அடிக்கு குறையாமல் இருக்கவேண்டும். தக்க காரணங்கள் இருந்தால், சிப்பந்திகளின் ஆரோக்கியத்திற்கு யாதொரு கெடுதியும் விளைவிக்காதபடி இந்த நிபந்தனைகளை ஷாப் இன்ஸ்பெக்டர் யுக்தப்படி, அவருக்குமேல் அதிகாரியான லேபர் கமிஷனருடைய அங்கீகாரத்துடன், தளர்த்தலாம். [ரூல் 6]

கேள்வி: சுகாதாரத்திற்கேற்றபடி கட்டடங்களை வைத்துக் கொள்ள என்ன செய்யவேண்டும்?

பதில்: கடைகள் உள்பட எல்லா ஸ்தாபனங்கள் நடக்கும் கட்டடங்களின் சுவர்கள் முதலியவைகளுக்கு 12 மாதத்திற்கு ஒரு முறைக்கு குறையாமல் சுண்ணாம்பால் வெள்ளையடிக்க வேண்டும்; அல்லது கலர் அடிக்க வேண்டும். இவை சுத்தமாயுமிருக்க வேண்டும். உத்திரம், அட்டை, கதவுகள், ஜன்னல்கள் முதலிய மர வேலைப்பாடுகளுக்கும் வருடத்திற்கு ஒரு முறை சுண்ணாம்பு வெள்ளை அல்லது கலர் அடிக்க வேண்டும் அல்லது ஏழு வருடங்களுக்கொரு முறையாவது வார்னிஷ் அல்லது பெயிண்ட் அடிக்க வேண்டும். கட்டடத்தில் குப்பை கூளம் 24 மணிக்கு மேல் சேரவிடக்கூடாது. இவைகளை ஷாப் இன்ஸ்பெக்டர் சொல்லும்விதம் அகற்ற வேண்டியது. மலம் முதலிய அசுத்தங்கள் எப்பொழுதும் மூடப்பட்டிருக்க வேண்டும். சாக்கடைகள் கல்லால் கட்டப்பட்டிருக்க வேண்டும். தினம் இரண்டு தடவை சாக்கடைகள் அலம்பப்பட்டு முடிந்தால், பெரிய சாக்கடைகளில் விழும்படி செய்யப்பட வேண்டும். வேலை செய்யப்படும் இடங்களும் சுற்றுப்புறமுள்ள இடங்களும் சுத்தமாக இருக்க வேண்டும். தினம் ஒரு முறைக்குக் குறையாமல் பெருக்கியும் மாதம் ஒரு முறைக்கு குறையாமல் ஒட்டடை அடித்தும் வரவேண்டும். கக்கூசுக்கு வெளியில் யாதொரு அசுத்தம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளப்பட வேண்டும். கக்கூசுகள் அடிக்கடி சுத்தம்செய்யப்பட வேண்டும். குடி தண்ணீர்வைக்கப்பட்டிருக்கும் இடம் சுத்தமாக இருப்பதுடன் அங்கிருந்து தண்ணீர் ஓட சாக்கடையும் இருக்கவேண்டும். தீ விபத்து ஏற்படாமல் இருக்க ஷாப் இன்ஸ்பெக்டர் சொல்லும் விதம் நடந்து கொள்ளவேண்டும். [ரூல் 5]

ஷாப் சட்ட அதிகாரிகள்

கேள்வி: ஷாப் சட்டத்தின் விதிகள் சரியாக அனுஷ்டிக்கப்படுகின்றனவா என்று பார்க்கவும் சட்டத்தை அமுல் நடத்தவும் அதிகாரிகள் யார்?

187688

பதில்: ஷாப் சட்டப்படி அதிகாரம் பெற்றவர்கள் (1) இன்ஸ்பெக்டர்கள் (2) லேபர் கமிஷனர் (3) மாகாண சர்க்கார்.

கேள்வி: இன்ஸ்பெக்டர்களை யார் நியமிப்பது?

பதில்: இன்ஸ்பெக்டர்களை நியமிப்பது மாகாண சர்க்காரே. ஆனால் மற்ற உத்தி

ரேடியோக்களை திறமையுடன் பழுது பார்க்க
சுதர்சன் ரேடியோ ஹவுஸ்
சக்கரபாணி கீழவீதி, :: கும்பகோணம்.

யோகம் பார்க்கும் அதிகாரிகளையும் ஷாப் சட்டத்தின்படி இன்ஸ்பெக்டர்களுடைய அதிகாரங்களையும் செலுத்தும்படி சர்க்கார் நியமிக்கலாம்.

சமீபத்தில் வந்த சர்க்கார் உத்திரவுப்படி அடியில் கண்ட உத்தியோகஸ்தர்களுக்கு தங்கள் தங்கள் அதிகார எல்லைக்குள் ஷாப் சட்ட இன்ஸ்பெக்டர்களின் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது:

(1) தொழிற்சாலை டெப்டி சீப் இன்ஸ்பெக்டர்.

(2) அஸிஸ்டெண்ட் லேபர் கமிஷனர்.

(3) தொழிற்சாலை இன்ஸ்பெக்டர்கள் ஸ்திரீ இன்ஸ்பெக்டர்கள்.

(4) லேபர் ஆபீசர்கள்.

(5) ஜில்லா சுகாதார உத்தியோகஸ்தர்கள்.

(6) உதவி ஜில்லா சுகாதார உத்தியோகஸ்தர்கள்.

(7) முனிசிபல் சுகாதார உத்தியோகஸ்தர்கள்.

(8) சென்னை கார்ப்பரேஷன் சுகாதார உத்தியோகஸ்தர்களும், உதவி சுகாதார உத்தியோகஸ்தர்களும். [42]

கேள்வி: ஷாப் இன்ஸ்பெக்டர்களுடைய அதிகாரம் என்ன?

பதில்: யுக்தமான காலங்களில் ஷாப் இன்ஸ்பெக்டர் கடை முதலிய ஸ்தாபனங்களுக்குள் போய் கட்டடங்களையும், முதலாளி வைத்திருக்கும் ரிஜிஸ்டர்களையும், முதலாளி சட்டப்படி போடவேண்டிய நோட்டிசுகளையும் பரிசோதிக்கலாம். சட்டப்படி இவைகள் இருக்கிறதா என்று பார்க்கலாம். சட்டப்படி சிப்பந்திகளுக்கு தினசரி இடைவேளை நேரம் கொடுக்கப்படுகிறதா என்றும் விடுமுறை நாட்கள் கொடுக்கப்படுகின்றதா என்றும், வேலை நேரம் சட்டப்படி இருக்கிறதா என்றும், அதிக நேர வேலைக்கு (ஓவர்டயம் வேலைக்கு) இரட்டிப்பு சம்பளம் கொடுக்கப்படுகிறதா என்றும், சிப்பந்திகளில் 14 வயது பூர்த்தி ஆகாதவர்கள் இருக்கிறார்களா என்றும், தினசரி திறந்து மூடும் நேரம் அனுஷ்டிக்கப்படுகிறதா என்றும் கவனிக்கலாம். ஸ்தாபனத்தில் உள்ளவர்களை இவைகளைப்பற்றி கேள்விகள் கேட்கலாம். [43 ரூல் 15]

கேள்வி: லேபர் கமிஷனருடைய அதிகாரங்கள் என்ன?

பதில்: (1) சுகாதார விஷயமாய் ஷாப் இன்ஸ்பெக்டர் செய்யும் உத்திரவின் பேரில் லேபர் கமிஷனருக்கு அப்பீல் செய்யலாம். (2) முதலாளியால் வேலையை விட்டு நீக்கப்பட்ட சிப்பந்தி இவருக்கு அப்பீல் செய்து கொள்ளலாம். (3) சிப்பந்திக்கு அபராதம் போட ஒரு ஸ்தாபனத்தின் முதலாளி லேபர் கமிஷனருடைய அனுமதி பெற வேண்டும். (இவைகள் விவரமாய் அந்தந்த இடங்களில் ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கின்றன.) (4) இச்சட்டம் ஒரு ஸ்தாபனத்திற்கோ, சிப்பந்திக்கோ அனுஷ்டிக்கப்படவேண்டியதா என்றும் சில ஸ்தாபனங்களில் ஏற்கனவே இச்சட்டத்தில் உள்ள அனுகூலங்களைவிட அதிக அனுகூலங்கள் இருந்து வருகிறதா என்றும் தீர்மானம் செய்ய வேண்டியவரும் இவர்தான்.

ஷாப் சட்ட ரிஜிஸ்டர்கள்

கேள்வி: ஷாப் சட்டப்படி ஒரு ஸ்தாபனத்தில் என்ன என்ன ரிஜிஸ்டர்கள் வைத்துக் கொள்ளப்பட வேண்டும்?

பதில்: (B) அபராத ரிஜிஸ்டர்.

(C) சிப்பந்தியின் தவறு அல்லது அலட்சியத்தால் முதலாளிக்கு ஏற்பட்ட நஷ்டங்களுக்காக செய்யப்பட்ட பிடித்தங்களைக் காண்பிக்கும் ரிஜிஸ்டர்.

(D) சிப்பந்திகளுக்கு கொடுக்கப்படும் அட்வான்ஸ் தொகைகளை காண்பிக்கும் ரிஜிஸ்டர்.

(E) சிப்பந்திகள் செய்யும் தினசரி வேலை நேரத்தைக் காண்பிக்கும் ரிஜிஸ்டர்.

(F) ஷை (தினசரி திறந்து மூடும் நேரம் வித்தியாசமில்லாதிருந்தால்)

(G) F ரிஜிஸ்டருக்கு பதிலாக சிப்பந்திகளின் தினசரி வேலை நேரம், இடை வேளை இவைகளைக் காட்டக்கூடிய நோட்டீஸ்.

(H) (G நமூனைப்படி நோட்டீஸ் போட்டால்) ஒவ்வொரு சிப்பந்தியும் செய்யும் வேலை நேரத்தைக் காண்பிக்கும் ரிஜிஸ்டர்.

(J) வார விடுமுறை நாட்களைக் காண்பிக்கும் நோட்டீஸ்.

(K) சிப்பந்திகள் எடுக்கும் லீவு நாட்களையும் விடுமுறைநாட்களையும் காண்பிக்கும் ரிஜிஸ்டர்.

கேள்வி: இச்சட்டத்தில் உள்ள சலுகைகளையும் அனுகூலங்களையும்விட அதிகமாகவே ஒருஸ்தாபனத்தில் உள்ள சிப்பந்தி அடைந்து வந்தால் இச்சட்டம் வந்தது அவரை பாதிக்குமா?

பதில்: பாதிக்காது. இவ்விஷயத்தில் சந்தேகம் வந்தால் அதைத் தீர்மானம் செய்ய வேண்டியவர் லேபர் கமிஷனர். [51]

கேள்வி: ஒரு ஸ்தாபனத்திற்கோ அல்லது அதில் வேலை செய்யும் ஒரு சிப்பந்திக்கோ இச்சட்டம் அனுஷ்டிக்கப் படவேண்டியதா என்று சந்தேகம் வந்தால் அதை யார் முடிவு செய்வது?

பதில்: லேபர் கமிஷனர்தான். [51]

ஒவ்வொரு கடையும், ஹோட்டல் முதலிய எல்லா ஸ்தாபனங்களும் வைத்துக்கொள்ள வேண்டியரிஜிஸ்டர்கள், நோட்டீஸ்கள் விபரம்.

B. (அபராத ரிஜிஸ்டர்.)
C. (நஷ்டஈடு ரிஜிஸ்டர்.)
D. (அட்வான்ஸ் ரிஜிஸ்டர்.)

இவைகள் ஜுலை இதழில் பிரசுரிக்கப்பட்டன. மற்ற ரிஜிஸ்டர்களும் நோட்டீசுகளும் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

நமூனா E

(ரூல் *16 (1)* படி)

சிப்பந்திகள் செய்யும் தினசரி வேலை நேரத்தைக் காண்பிக்கும் ரிஜிஸ்டர்

மாதம் .... வருடம் .... மாத நாட்கள்

சிப்பந்தியின் பெயர்.	17 வயது பூர்த்தியாகாதவரா அல்லவா	வேலை ஆரம்பிக்கும் நேரம்	வேலை முடிக்கும் நேரம்	இடைவேளை	மாதத்தில் மொத்தம் வேலை செய்த மணி	ஓவர் டைம் வேலை செய்த நாட்களும் மணி நேரமும்	மாதத்தில் ஓவர் டைம் வேலை செய்த மொத்த நேரம்
		1,2,3,4,....31			1,2,3,........31		
1	2		3		4	5	6

[விடுமுறை நாட்களை H என்று குறிப்பிட வேண்டியது.]

FOR SCHOOL CHALKS:
GURUNATHAN CHALK WORKS
EAGLE CHALK CRAYONS
GURUNATHAN CHALK WORKS KUMBAKONAM

நமூனா F

(ரூல் 16 (1) படி)

சிப்பந்திகள் வேலை ரிஜிஸ்டர்

(தினசரி குறிப்பிட்ட காலத்தில் திறந்து மூடப்படும் ஸ்தாபனங்களுக்கு)

1	2	3	4	5	6	7	8	9
					1,2, ... 31		1,2, ...31	
சிப்பந்தியின் பெயர்	17-வயது பூர்த்தியாகாதவரா அல்லவா	வேலை ஆரம்ப நேரம்	வேலை முடியும் நேரம்	இடை வேளை	ஒவ்வொரு நாளும் வேலை செய்த மணி நேரம்	மாதத்தில் மொத்தம் வேலை செய்தநேரம்	ஓவர்டைம் வேலைசெய்த நாட்களும் நேரமும்	மாதத்தில் ஓவர்டைம் செய்த நேரம்

[விடுமுறை நாட்களை H என்று குறிப்பிட வேண்டியது.]

நமூனா G

(ரூல் 16 (2) படி)

நோட்டீஸ்

194........ முதல் சிப்பந்திகள் தினசரி வேலை நேரம்

ஸ்தாபனத்தின் பெயர் ....

இலாகாவின் விபரம் ....

1	2	3		
சிப்பந்தியின் பெயர்	17 வயது பூர்த்தி ஆனவரா அல்லவா	வேலை ஆரம்ப நேரம்	இடை வேளை	வேலை முடியும் நேரம்

நிர்வாகஸ்தர்,

தேதி

குறிப்பு: (1) இந்த வேலை நேரம் அமுலுக்கு வரவேண்டிய வாரத்திற்கு முந்திய சனிக்கிழமை அன்றோ அதற்கு முந்தியோ இந்த நோட்டீஸ் போடப்பட்டு அது அமுலில் இருக்கும் காலம் முழுவதும் சிப்பந்திகள் பார்க்கும்படி இருந்து வர வேண்டும்.

(2) இதில் கண்ட மணிநேரம் ஓவர்டைம் நீங்கலாக.

(3) இடைவேளை ஆரம்பிக்கும் மணியும் முடியும் மணியும் காண்பிக்கப்படவேண்டும். (உதாரணமாக இடைவேளை மாலை 1 மணி முதல் 2 மணி வரை.)

நமூனா H

(ரூல் 16 (3) படி)

சிப்பந்தி செய்த வேலை நேரம் காண்பிக்கும் ரிஜிஸ்டர்

(G நமூனாப்படி நோட்டீஸ் போடப்பட்டிருந்தால் பட்டியில் இந்த ரிஜிஸ்தர் வைத்துக்கொள்ள வேண்டும்.)

இலாகா மாதம் வருடம்

1	2	3	4	5
சிப்பந்தியின் பெயர்	17 வயது பூர்த்தி ஆனவரா இல்லையா	மாதத்தில் வேலை செய்த மொத்த நேரம்	ஓவர்டைம் வேலை செய்த நாட்களும் நேரமும் 1,2,3,4,5....31	மாதத்தில் மொத்தம் செய்த ஓவர்டைம் நேரம்

குறிப்பு: அன்றன்றே பதியவேண்டும்.

(தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்கவும்)

கும்பகோணம்
ஸ்ரீ சக்கரபாணி சுவாமி தெற்கு வீதியிலுள்ள
கணபதி விலாஸ் காபி ஹோட்டல்
(போர்டிங் & லாட்ஜிங்)
ருசிகரமான சாப்பாடும் சிற்றுண்டியும் கிடைக்கும். Prop: G கணேசன்

விற்பனை வரி

(சென்ற இதழ் தொடர்ச்சி)

S. சாம்பசிவய்யர் B. A., B. L.,

வியாபாரி சென்னை மாகாணத்திற்கு வெளியே இருந்தால்: இம்மாகாணத்தில் வியாபாரம் நடத்தும் ஒரு வியாபாரி இம் மாகாணவாசியாக அல்லாமல் வெளி மாகாணத்தில் இருந்துகொண்டு ஏஜண்டுகள் மூலம் இம்மாகாணத்தில் வியாபாரம்நடத்தி வந்தால் விற்பனை வரிச் சட்டப்படி அந்த ஏஜண்டே வியாபாரியாக பாவிக்கப்படுவார். மேலும், அந்த ஏஜண்டால் நடத்தப்படும் மொத்த வியாபாரம் வருடத்தில் ரூ. 10,000-க்கு குறைவாக இருந்தபோதிலும் இச்சட்டப்படி விற்பனை வரி கொடுத்தாக வேண்டும். (இம்மாகாண வாசிகளான வியாபாரி வருடத்தில் மொத்த வியாபாரம் ரூ. 10,000-க்கு குறைவாக நடத்தினால் அவருக்கு விற்பனை வரி கிடையாதென்று ஏற்கனவே சொல்லப்பட்டது). அயல் வியாபாரியின் ஏஜண்ட் விற்பனை வரிக்கு வேண்டிய தொகைகளை தன் முதலாளிக்கு அனுப்பாமல் பிடித்து வைத்துக்கொள்ள பாத்தியமுண்டு. ஏனென்றால் மேலே சொன்னபடி, விற்பனை வரி செலுத்த அந்த ஏஜண்டுதான் ஜவாப்தாரி. இம்மாகாணத்தில் தனக்கு மொத்த வியாபாரம் வருடத்தில் ரூ. 10,000-க்கு குறைவாகவே இருந்தால் அந்த அயல் வியாபாரி, இம்மாகாணத்திலுள்ள தன்னுடைய ஏஜண்டால் விற்பனை வரி செலுத்தப்பட்ட வருடக் கடைசியிலிருந்து 12 மாதங்களுக்குள் விற்பனை வரி அதிகாரிக்கு மனுப்போட்டு, செலுத்தப்பட்ட வரியையோ, அதன் ஒரு பகுதியையோ வாபஸ் பெறலாம்.

விற்பனைவரிச் சட்டக் குற்றங்கள்

ஒரு வியாபாரி விற்பனைவரிச் சட்டப்படி என்ன செய்யவேண்டும், என்ன செய்யக் கூடாதென்று அச்சட்டத்தில் இருப்பதை ஒவ்வொரு வியாபாரியும் தெரிந்துகொள்ள வேண்டியது மிக அவசியம். விற்பனைவரிச் சட்டம் 15-வது செக்ஷன் பிரகாரம் கீழ் கண்டவைகள் குற்றமாகும்:—

(1) வேணுமென்று தெரிந்தே பொய்க் கணக்கு (ரிடர்ன்) கொடுப்பது; இச்சட்டப் படிக்கும் அதன்படி உள்ள விதிகள்படிக்கும் கொடுக்கவேண்டிய ரிடர்னை கொடுக்காமலிருப்பது.

(2) வியாபாரி செலுத்தவேண்டிய வரி அல்லது லைசென்சுகட்டணங்களை கெடுவுக்குள் கட்டாமலிருப்பது.

(3) சட்டப்படி அதிகாரமுள்ள அதிகாரிகள் ஒரு வியாபாரியின் கணக்குகளை பரிசிலனை செய்வதையும் சரக்கு, கடைகள், கிடங்குகள் முதலியவற்றை சோதனை செய்வதையும் தடுப்பதும் இடையூறுகள் உண்டாக்குவதும்.

(4) கொடுக்கவேண்டிய வரி அல்லது லைசென்சு கட்டணங்கள் முதலியவற்றை கொடுக்காமல் மோசடியாய் சாமர்த்தியம் செய்து தப்பித்துக்கொள்வது.

(5) வருடத்தில் ரூ. 7500-க்கு குறையாமல் மொத்தவியாபாரம் செய்யும் வியாபாரி செக்ஷன் 8 A பிரகாரம் தன்னை ரிஜிஸ்டர் செய்துகொள்ளாமலிருப்பது.

(6) ரிஜிஸ்டர் செய்துகொள்ளாத வியாபாரி விற்பனை வரி வசூல் செய்வது; ரிஜிஸ்டர் செய்துகொண்ட வியாபாரி சட்ட விரோதமாய் 'விற்பனைவரி' என்று வசூல் செய்வது.

(7) வசூல் செய்த ஜாடா விற்பனை வரியையும் கெடுவுக்குள் சர்க்காருக்குச் செலுத்தாமலிருப்பது.

(8) விற்பனை வரிச் சட்டத்தின் எந்த ஷரத்துக்கும் முரணாகவேணுமென்று நடந்துகொள்வது.

மேலும், இச்சட்டத்தை அனுசரித்து மாகாண சர்க்கார் விதிகள் (ரூல்கள்) செய்யலாம். அவ்விதம் செய்யப்பட்ட விதிகளின் பிரகாரம் சில விஷயங்கள் குற்றமாகும். அவையாவன :

(1) ஏஜண்டாக வியாபாரம் செய்ய லைசென்சு பெற்றவர் ஒவ்வொரு வருட மே மாதம் முதல் தேதிக்கு முன் 6-வது நமூனப்படி (மார்ச்சு மாதம் 31-ம் தேதியோடு முடிந்த ஒரு வருடத்திற்கு) ரிடர்ன் அனுப்பாமலிருப்பது.

(2) மற்ற வியாபாரங்களுக்கு லைசென்சு பெற்ற வியாபாரிகள் (தோல் பதனிடுபவர்-விற்பவரைத் தவிர) ஒவ்வொரு வருடம் ஜூன் மாதம் 20-ம் தேதிக்கு முன் தான் முன் வருடத்தில் செய்த மொத்த வியாபாரத்தைக் காண்பிக்கக்கூடிய ரிடர்னை நமூன 7 படி அனுப்பாமலிருப்பது.

(3) வியாபாரியும், லைசென்சு பெற்றவரும் வியாபார வருடம் முடிந்து இரண்டு வருடங்களுக்கு கணக்குகள், வவுச்சர்கள் முதலியவற்றை வைத்துக்கொள்ளாமலிருப்பது.

(4) தனித்தனி கணக்குகள் வைத்துக் கொள்ள வேண்டிய வியாபாரிகள் அப்படி செய்யாமலிருப்பது.

(5) வேறு நபர்களுடன் கூட்டாக சேரும் வியாபாரிகளும், லைசென்சு பெற்றவர்களும் அவ்விஷயத்தை 30 தினங்களுக்குள் வரி விதிக்கும் அதிகாரிக்கு தெரியப்படுத்தாமலிருப்பது.

(6) வியாபாரத்தை நிறுத்திய வியாபாரியும், லைசென்சு பெற்றவரும் அதை வரி விதிக்கும் அதிகாரியிடம் தெரியப்படுத்தாமலிருப்பது. அவ்வித வியாபாரிகள் இறந்திருந்தால் அவர்களுடைய வார்சுகள் தெரியப்படுத்தாமலிருப்பது.

இக்குற்றங்களை விசாரிக்க பிரசிடென்சி மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கும், முதல் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கும்தான் அதிகாரம். குற்றம் ருசுவானல் ரூ. 1000 வரை அபராத தண்டனை விதிக்கலாம். இதைத் தவிர தண்டனை அடையும் வியாபாரி கொடுக்கத் தவறிய வரி முதலிய தொகைகள் இருந்தால் அதைத் தீர்ப்பில் காணப்பட்டிருக்கும். இதையும் அபராதம் போலவே வசூல் செய்யலாம்.

சர்க்காருடன் ராஜி செய்து கொள்ளலாம்

இச்சட்டப்படி குற்றம் செய்த வியாபாரி தான் செய்த குற்றத்திற்காக அதிகாரிகளுடன் ராஜி செய்து கொள்ளலாம்.

வரி கொடுக்காத விஷயங்களில் வரியைத் தவிர அதைப்போல் இரண்டு மடங்கு தொகை அல்லது ரூபாய் ஆயிரம் (எது அதிகமாயிருக்கிறதோ அதை) இதற்கு மேற்படாமல் வியாபாரியிடம் பெற்றுக் கொண்டும் மற்ற குற்றங்களுக்காக ரூ. 1000-க்கு மேற்படாத தொகையை பெற்றுக் கொண்டும் அதிகாரிகள் ராஜியை அங்கீகரிக்கலாம். ராஜியை அங்கீகரிக்க ஏ. ஸி. டி. ஓ. வுக்கும் டி. ஸி. டி. ஓ. வுக்கும் தான் அதிகாரம். இவர்கள் ஸி. டி. ஓ. டிப்டி கமிஷனர், ரிவின்யூபோர்ட் இவர்களுடைய உத்திரவுகளுக்குட்பட்டவர்கள். ஸி. டி. ஓ. வும் ராஜியை ஏற்கலாம். இது விஷயத்தில் அவர் டிப்டி கமிஷனர், ரிவின்யூபோர்டு இவர்களுடைய உத்திரவுக்கு உட்பட்டவர்.

கிரிமினல் கோர்ட்டுகளின் அதிகாரம்

விற்பனை வரிக் குற்றங்களைப் பற்றி விசாரணை செய்யும் கிரிமினல் கோர்ட்டுகளில் விற்பனை வரி முதலியவை போடப்பட்டது செல்லாது என்ருவது, யார் பேரில் வரி போடப்பட்டதோ அவர் அவ்வரியைக் கொடுக்கக் கடமைப் பட்டவரல்ல என்ருவது, விதிக்கப்பட்ட வரியின் தொகை சரியல்ல என்ருவது கக்ஷியாட முடியாது. இவ்விஷயங்களை பரிசீலனை செய்ய கிரிமினல் கோர்ட்டுகளுக்கு அதிகாரம் கிடையாது. (ஏற்கனவே அந்த அதிகாரம் இருந்ததை எடுக்க விற்பனை வரிச்சட்டத்தில் 1—1—1948 முதல் புதிதாய் 16 A என்ற செக்ஷன் சேர்க்கப்பட்டது.)

சிவில் கோர்ட்டுகளின் அதிகாரம்

பொதுவாகச் சொன்னால், சிவில் கோர்ட்டுகளுக்கு, சகல வித வியாஜ்யங்களையும் விசாரிக்க அதிகாரமுண்டு. ஆனால் சில தாவாக்களை சிவில் கோர்ட்டுகளில் ஏற்றுக் கொள்ளக்கூடாதென்று சட்டத்தில் தடை இருந்தால் அவ்வகைப் பட்ட தாவாக்களை விசாரிக்க சிவில் கோர்ட்டுகளுக்கு அதிகாரமில்லை. விற்பனை வரிச்சட்டத்திலும் சிலதாவாக்களை சிவில் கோர்ட்டுகள் விசாரிக்கக்கூடாதென்று தடை ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

அதாவது விற்பனைவரிச் சட்டத்தை அமுல் நடத்தும் அதிகாரிகளும் உத்தியோகஸ்தர்களும் அச்சட்டப்படி செய்ய வேண்டிய காரியங்களை செய்தாலும் அல்லது அச்சட்டப்படி செய்வதாய் பொருள் படும்படி அவர்கள் செய்தாலும், அதைக் குறித்து ஒருவரும், மாகாண சர்க்காருடைய முந்திய அனுமதியன்னியில், சிவில் கோர்ட்டுகளில் அந்த சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் பேரில் தாவா தொடர முடியாது; கிரிமினல் கேசுகளும் கொடுக்கமுடியாது. எந்த உத்தியோகஸ்தர் பேரிலாவது தாவா தொடர வேண்டுமானால் முன்னதாகவே அதற்கு மாகாண சர்க்காரிடம் அனுமதி பெறவேண்டும். மேலும், சட்டப்படி செய்யவேண்டிய கடமைகளை நல்லெண்ணத்துடன் ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தர் செய்வதில் என்ன நேர்ந்தாலும் அதற்காக அவர் ஒருவருக்கும் ஜவாப்தாரியல்ல. மேலும் சர்க்கார்பேரில் தாவா தொடருவதாக இருந்தாலும், சர்க்கார் உத்தியோகஸ்தர் பேரில் சிவில் அல்லது கிரிமினல் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வதாக இருந்தாலும், எந்தக் காரியத்திற்காக அந்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படுகிறதோ அது நடந்து 6 மாத காலத்திற்குள் நடவடிக்கை தொடரப்பட வேண்டும்.

இத்துடன் விற்பனைவரிச் சட்டத்தின் அடிப்படையான முக்கிய அம்சங்களைப் பற்றிய விமர்சனம் முற்றிற்று. இனிவரும் இதழ்களில் விற்பனைவரிச் சட்டத்தில் ஏற்படக்கூடிய சட்ட நுணுக்கங்களை தெளிவுபடுத்தும் முறையில் உயர்தர நீதிமன்றங்களால் அளிக்கப்பட்டிருக்கும் சில தீர்ப்புக்களையும் எடுத்துக் காட்டப்படும்.

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

நமூனா J

(ரூல் *16 (4)* படி)

நோட்டீஸ்

விடுமுறை

இந்தக் கடையில் (அல்லது)
வியாபாரஸ்தாபனத்தில்
காபிகிளப்பில்
சாப்பாடு ஹோட்டலில்
தியேட்டரில்
வேறுபொது உல்லாசஸ்தலத்தில்

வேலை செய்யும் சிப்பந்திகளுக்கு இந்த நோட்டீஸ் தேதியாகிய............முதல் மறு நோட்டீஸ் வரையில் கீழே கண்டபடி விடுமுறை கொடுக்கப்படும்.

சிப்பந்தியின் பெயர்.	விடுமுறைநாள்.

(எல்லா சிப்பந்திகளுக்கும் ஒரே விடுமுறை நாளாக இருந்தால் சிப்பந்தியின் பெயர் என்பதின் கீழ் "எல்லா சிப்பந்திகளுக்கும்" என்று எழுதவேண்டும்.)

நமூனா K

(ரூல் *16 (9)* படி)

விடுமுறை (லீவு) ரிஜிஸ்டர்

தொடர்ந்த நம்பர்	சிப்பந்தியின் பெயர்	தகப்பன் பெயர்	லீவு கேட்ட தேதி	எவ்வளவு நாள் லீவு கேட்கப்பட்டது	லீவுக்குக் காரணம்	லீவு கொடுக்கப்பட்டதா	லீவு மறுக்கப்பட்டால் அதன் காரணம்	எவ்வித லீவு கேட்கப்பட்டது	எவ்வித லீவு கொடுக்கப்பட்டது	குறிப்புக்கள்
1	2	3	4	5	6	7	8	9	10	11

கண்ட்ரோல்-லைசென்ஸ்-ரேஷன்-விலை நிர்ணயம்
இதர சர்க்கார் அறிக்கைகள்

விவசாயிகள் சம்பந்தமான சர்க்கார் அறிக்கைகள்

விவசாய பம்பு செட்டுகளுக்கு பெட்ரோல்

லைசென்ஸ் புதுப்பிப்பதுபற்றி சர்க்கார் உத்திரவு

சென்னை, ஜுலை, 16—சென்னை சர்க்கார் அறிக்கையொன்று கூறுவதாவது :— விவசாய பம்பு செட்டுகளுக்கு மாகாண ரேஷன் அதிகாரியிடம் பெட்ரோலுக்காக லைசென்சைப் புதுப்பிக்க மனுச் செய்யும்பொழுது பழைய லைசென்ஸையும், ரசீது புஸ்தகத்தின் அட்டையையும், உபயோகப்படுத்தாத ரசீதுகள் இருந்தால் அவற்றையும் அனுப்பவேண்டும். ஜில்லா விவசாய அதிகாரிகள் மூலம் லைசென்சை புதுப்பிக்க மனுச் செய்துகொள்வதில் கஷ்டம் ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறது.

ஆகவே பம்பு செட்டுகளுக்கு பெட்ரோல் பெறுவதற்கு காலதாமதம் ஏற்படாமல் முன்னதாகவே (அதாவது லைசென்ஸ் முடிவடைய 15 தினங்களிருக்கும் போதே) பெட்ரோல் வாங்கிக்கொள்ளும்படி ஆலோசனை கூறப்படுகிறது. பின்பு உடனே ஜில்லா விவசாய அதிகாரி மூலம் லைசென்ஸைப் புதுப்பிக்க மனுச் செய்துகொள்ளவேண்டும். காலதாமதமன்னியில் இந்த மனுக்களை மாகாண ரேஷன் அதிகாரிக்கு அனுப்பிவைக்க ஜில்லா விவசாய அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். ஸ்திரமான இன்டெர்னல் கம்பஸ்டன் என்ஜின் வைத்திருப்பவர் பெட்ரோலியம் சட்டப்படி லைசென்ஸ் இல்லாமல் 20 காலன் வரை பெட்ரோல் கொண்டு வரவோ, ஸ்டோர் செய்து வைக்கவோ அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

நஞ்சையில் வீடு கட்டுதல்

தடை மசோதா வாபஸ் சர்க்கார் முடிவு

சென்னை, ஜுலை 2—நஞ்சை நிலங்களில் கட்டிடம் கட்டுவதை தடுப்பதற்கான மசோதாவைக் கைவிடுவது என சென்னை சர்க்கார் தீர்மானித்திருக்கிறது. முந்திய ரெவின்யூ மந்திரி ஸ்ரீ களா வெங்கட்ராவ் இந்த மசோதாவை சென்ற ஜுலையில் அசெம்பிளியில் பிரேரேபித்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

அப்போது இந்த மசோதாவைத் தனிக் கமிட்டிக்கு அசெம்பிளி அனுப்பியது. ஸ்ரீ களா வெங்கட்ராவ் தலைமையில் தனிக் கமிட்டி கூட்டம் இன்று நடைபெற்றது. மசோதாவை நிறைவேற்ற வேண்டாம் என சர்க்கார் தீர்மானித்ததைக் கமிட்டி ஏகமனதாக ஒப்புக்கொண்டது.

ஜாகைக் கஷ்டத்தால் ஜனங்கள் கஷ்டப்படுவதால் இதுபோன்ற மசோதாவை நிறைவேற்றுவது அவசியமில்லை என்று சர்க்கார் கருதியதாகத் தெரிகிறது.

கிராமாந்திர வீடுகள் திட்டம்

சர்க்கார் கவனிக்கின்றனர்

விடுதிகள் திட்டகமிட்டி சிபார்சுகள் மீது முடிவு

சென்னை, ஜுலை. 11-மாகாண விடுதிகள் திட்ட கமிட்டியின் சிபார்சுகள் சம்பந்தமாக சென்னை சர்க்கார் விடுத்துள்ள அறிக்கையில் கூறுவதாவது :—

1. பொது ஜனங்களுக்கு விடுதிகள் கட்டும் திட்டம் சர்க்காரிடம் கிடையாது. கூட்டுறவு ஸ்தாபனங்கள் போன்ற இதர ஸ்தாபனங்கள் மேற்கொள்ளும் திட்டத்தில் விதிகள் இயற்ற சர்க்காருக்கு அதிகாரம் கிடையாது. ஆகவே பொது ஜனங்களிடையே வீடுகளை விநியோகிப்பது சம்பந்தமாக முன்

சலுகை காட்டுவதென்ற பிரச்னை சர்க்காரைப் பொறுத்தவரையில் எழவில்லை.

2. சர்க்கார் உதவியுடன் பெரிய நிலச்சுவான்கள் தங்களுடைய குடியானவர்களுக்கு விடுதிகள் கட்டித்தர ஏற்பாடு செய்யவேண்டுமென்று கமிட்டி யோசனை கூறியிருக்கிறது. கிராம விடுதிகள் திட்டமொன்று சர்க்காரின் பரிசீலனையில் இருக்கிறது. இத்திட்டத்தை விவசாய தொழிலாளர்கள் பயன் படுத்திக் கொள்ளலாம்.

3. சர்க்காரின் உதவியுடன் ஏழைகளுக்கும் அனாதைகளுக்கும் ஸ்தல ஸ்தாபனங்கள் விடுதிகள் கட்டித்தர வேண்டுமென்று கமிட்டி செய்துள்ள சிபாரிசை ஏற்பதிற்கில்லை. ஏனெனில் சர்க்காரின் பண நிலைமையும் ஸ்தல ஸ்தாபனங்களின் பண நிலைமையும் அதை அனுமதிக்காது.

சர்க்கார் நிலங்களை ஜாரி செய்வது பற்றி புதிய சர்க்கார் கொள்கை

நிலத்தை ஜாரி செய்கையில் பின்வரும் வரிசைக் கிரமத்தில் சலுகை காட்ட வேண்டும் என சர்க்கார் உத்திர விட்டிருக்கிறது.

முதன் முதலாக அரசியல் தியாகிகளுக்கு ஜாரி செய்யவேணடும்.

அதற்கு அடுத்தபடியாக, இரண்டாவது உலக யுத்தத்தில் சேவை செய்த மாஜி ராணுவத்தினருக்கு சலுகை காட்ட வேண்டும். இந்திய தேசிய ராணுவத்தினரும் இவர்களில் அடங்குவர். 5 ஏக்கர் நஞ்சை அல்லது 10 ஏக்கர் புஞ்சை நிலத்தை ஏற்கனவே பெற்றிராத ராணுவத்தினருக்குத்தான் இவ்விதம் ஜாரி செய்யலாம்.

மாஜி ராணுவத்தினருக்கு அடுத்தபடியாக, ஹரிஜனங்கள், பின் தங்கிய வகுப்பினர் உட்பட நிலமற்ற ஏழை மக்களுக்குச் சலுகை காட்டவேண்டும்.

நிபந்தனைகள்

கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு நிலம் ஜாரி செய்யப்படும்:—

மேற்குறிப்பிட்ட நபர்களுக்கு நிலம் இலவசமாக ஜாரி செய்யப்படும். ஆனால் அந்த நிலத்தில் கட்டிடங்கள், கிணறுகள், மரங்கள் முதலியவை இருந்தால் அவற்றின் விலையையும், சர்வே கல் நாட்டுவது, எல்லைக் குறிப்பது போன்ற காரியங்களுக்கான கட்டணங்களையும் நிலத்தைப் பெறுபவர் செலுத்தவேண்டும்.

ஜாரி செய்யப்பட்ட நிலத்தை 10-வருஷ காலத்திற்கு விற்பனை செய்யவோ, வேறு வில்லங்கப்படுத்தவோ கூடாது. இந்த நிபந்தனையை மீறினல் ஜாரியான நிலத்தை சர்க்காரே மீண்டும் எடுத்துக் கொள்ளலாம்.

ஜாரி செய்யப்பட்டு மூன்று வருஷங்கள் கழியுமுன் அந்த நிலத்தில் சாகுபடி தொடங்க வேண்டும். இல்லையேல் அந்த நிலத்தை சர்க்காரே மீண்டும் எடுத்துக் கொள்ளலாம்.

முதல் மூன்று வருஷங்களுக்கு நில வரி வசூலிக்கப்படமாட்டாது. ஆனல் சர்க்கார் ஆயக்கட்டிலிருந்து நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்சப்படுமானல் தண்ணீர்த் தீர்வை வசூலிக்கப்படும்.

நிலம் யாருக்கு ஜாரி செய்யப்படுகிறதோ அவர்தான் நிலத்தை சாகுபடி செய்ய வேண்டும். அல்லது அவர் குடும்பத்தினரோ அல்லது கூலி ஆட்கள் மூலமோ அல்லது இரு சாராரும் சேர்ந்தோ சாகுபடி செய்யவேண்டும்.

ஆக்கிரமிப்புகள்

அத்து மீறிப் பிரவேசிப்பவர்கள் வசமுள்ள நிலங்கள் சம்பந்தமாக என்ன நடவடிக்கைஎடுப்பதுஎன்பதுபற்றி சர்க்கார் கவனமாக பரிசீலனை செய்துள்ளனர். இவ்விதம் அத்துமீறி சர்க்கார் நிலத்தை ஆக்ரமித்துக் கொண்டுள்ளவர்களுக்கு எவ்வித சலுகையும் கொடுக்கப்படக் கூடாதென்றும் இது போன்ற ஆட்களை வெளியேற்ற உத்திரவுகள் பிறப்பிக்கவும் சர்க்கார் உத்தேசித்துள்ளார்கள். ஆனால் இவர்கள் வெளியேற்றப்படுவது கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருக்கும்:—

சர்க்கார் நிலங்களை அத்துமீறி ஆக்ரமித்துள்ள நிலமில்லாத ஏழைகள் (அதாவது 5 ஏகரா நஞ்சை நிலம் அல்லது 10 ஏகரா புஞ்சை நிலத்திற்கு மேல் அதிகமாக இல்லாதவர்கள்) வெளியேற்றப்பட மாட்டார்கள். இவர்கள் இவ்விதம் நிலத்தை வைத்துக் கொண்டிருப்பதற்கு வேறு எவ்வித ஆட்சேபமும் இல்லாவிடில் அவர்கள் வைத்துக் கொண்டுள்ள நிலம் அவர்களுக்கே ஜாரி செய்யப்படும். 5 ஏகராவுக்கு மேல் நஞ்சை நிலமோ அல்லது 10 ஏகரா புஞ்சை நிலமோ அல்லது சொந்தமாக வேறெந்த நிலமாவது அவர்கள் வைத்துக் கொண்டிருந்தால்; அத்துமீறி ஆக்ரமித்துள்ள சர்க்கார் நிலங்களுமாகச் சேர்ந்து குறிப்பிட்ட அளவுக்கு மேல் அதிகமாகிவிட்டால், எவ்வளவு அதிகமாக அவர்கள் நிலம் வைத்துக் கொண்டிருக்கிறார்களோ அந்த அதிகப் பகுதியிலிருந்து அவர்கள் வெளியேற்றப்படுவர்.

சர்க்கார் நிலத்தில் சிறிய பகுதியில் அத்துமீறி ஆக்ரமித்திருந்து, அந்த ஆக்ரமிப்பு ஆட்சேபிக்கத்தக்கதாய் இல்லாவிடில், ஆக்ரமிப்பாளர்கள் வெளியேற்றப்படமாட்டார்கள். அதாவது நஞ்சை நிலத்தில் 25 சென்ட் அல்லது புஞ்சை நிலத்தில் 50 சென்டுக்கு மேல் இந்த ஆக்ரமிப்பு இருக்கக்கூடாது. இத்தகைய நிலங்களை கலெக்டர் உசிதம்போல அந்நிலத்தை வைத்திருப்போருக்கே ஜாரி செய்யலாம்; அல்லது குத்தகைக்கு விடலாம்.

நிலத்தைச் சாகுபடிக்குப் பண்படுத்தவோ அபிவிருத்தி செய்யவோ கணிசமான பணத்தையும் உழைப்பையும் செலவிட்டவர் அந்நிலத்தை ஆக்ரமித்திருந்தால்; அத்தகைய நிலத்தை அந்த ஒரு நபரே தொடர்ந்து வைத்திருக்க அனுமதிக்கப்படுவார். இத்தகைய நிலங்கள் அந்த நபர்களுக்கே ஜாரி செய்யப்படலாம். அல்லது முதலீட்டாகச் செலவிட்ட பணம் மீள்வதற்கான காலம் வரை அவர்களுக்கே அந்நிலங்கள் குத்தகைக்கு விடப்படலாம். ஆனால் இந்த ஆக்ரமிப்புகளுக்கு வேறு வழிகளில் ஆட்சேபணை இருக்கக் கூடாது.

இதர பூமிகள்

கிராமாந்திர மனைகளை ஒட்டியுள்ள நிலங்களை 5 ஏக்கர் விஸ்தீரணத்துடன் இருந்து விளையாட்டு மைதானம், பள்ளிக்கூடம் போன்ற சமுதாய காரியங்களுக்காக ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தால் அந்நிலங்களை யாருக்கும் ஜாரிசெய்யக்கூடாது. குறிப்பிட்ட காரியங்களுக்காக ஒதுக்கப்பட்டு அக்காரியங்களுக்கோ, வேறு சமுதாய காரியங்களுக்கோ தேவைப்படாத சமுதாய புறம்போக்கு நிலங்களை ஜாரி செய்யலாம். ஜாரி செய்ய வேறு நிலங்கள் இல்லாதிருந்தால்தான் இவ்விதம் சமுதாய புறம்போக்குகளை ஜாரி செய்யலாம்.

வளர்ச்சியில்லாமல் இருந்து ரிசர்வ் செய்யப்பட வேண்டாம் என காட்டிலாகா அதிகாரிகளால் கருதப்படும் ரிசர்வ் காடுகளை அவசியமானால் ஜாரி செய்யலாம்.

சேர்ந்தாற்போல் தொடர்ச்சியாக உள்ள விரிவான நிலங்களை ஆரம்பத்தில் குறிப்பிட்ட மூன்று தரத்தினர்கொண்ட கூட்டுறவு சங்கங்களுக்கே சாதாரணமாக ஜாரி செய்யலாம். (அரசியல் தியாகிகள் மாஜி ராணுவத்தினர், நிலமற்ற ஏழைகள் என்பவர்களே அந்த மூன்று தரத்தினர்)

உணவு தானியம்

சென்னை உணவு தானியக் கட்டுப்பாடு உத்திரவு (1947)ல் புதிதாய் ரூல் 5 A என்று சேர்க்கப்பட்டிருக்கிறது. அதாவது 3 வது விதிப்படி 19—7—1949-க்கு முன் கொடுக்கப்பட்டிருக்கும் லைசென்சுகளும் விதி விலக்கு உத்திரவுகளும் 31-3-1950 வரைதான் அமுலில் இருக்கும். பிறகு தேவையானால் புதிப்பித்துக் கொள்ள வேண்டும். 19—7—1949-க்குப் பிறகு கொடுக்கப்படும் லைசென்சுகளும் விதி விலக்கு உத்திரவுகளும் அவைகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் வருடத்திற்கு மட்டில் தான் அமுலில் இருக்கும். அவைகளையும் பிறகுபுதிப்பித்துக்கொள்ளலாம். ஒவ்வொரு லைசென்சுக்கும், விதி விலக்குக்கும் அவைகளை புதிப்பிக்கவும் கட்டணம் ரூ. 24/- செலுத்தவேண்டும். லைசென்சு கட்டணம் செலுத்தவேண்டிய தேதி சிவில் சப்ளைஸ் கமிஷனரால் குறிப்பிடப்படும். சர்க்காருக்கு யுக்தமாய்த் தோன்றும் லைசென்சுகளுக்கு கட்டணம் இல்லாமல் வஜா செய்ய அதிகாரமுண்டு. லைசென்சு, புதிப்பித்தல், விதி விலக்கு இவைகளுக்கு செலுத்த வேண்டிய கட்டணத்தை சர்க்கார் கஜானுவில் கட்டி ரசிதை மனுவுடன் அனுப்ப வேண்டும். வருடம் என்பது ஏப்ரல் மாதம் முதல் தேதி ஆரம்பமாகும். நடுவில் கொடுக்கப்படும் லைசென்சு வகையறுக்களுக்கும் முழுக்கட்டணம்தான் கட்ட வேண்டும்.

(*19—7—1949*-சென்னை சர்க்கார் கெஜட் பாகம் II ரூல் சப்ளிமெண்ட் பக்கம் *6*)

காகிதம்

நியூஸ் பிரிண்ட் கண்ட்ரோல் ரத்து

1947-ம் வருடத்திய நியூஸ் பிரிண்ட் கண்ட்ரோல் (நீ. 2) உத்தரவும், நியூஸ் பிரிண்ட் காகிதங்களின் அதிகபட்ச விலையை நிர்ணயம் செய்யும் 14—5—1948-ந் தேதி சர்க்கார் அறிக்கையும் 14—6—1949 விருந்து ரத்து செய்யப்பட்டன.

(*5-7-1949* சென்னை சர்க்கார் கெஜட் பாகம் II பக்கம் *630*)

ஷாப் சட்ட அறிக்கை

திறந்து மூடும் நேரம் — சில ஸ்தாபனங்களுக்குக் கிடையாது; 1—7—1949 முதல் சென்னை மாகாணத்திலுள்ள எவ்வித கடை ஹோட்டல் முதலிய ஸ்தாபனங்கள் தினசரி எந்த மணிக்கு முன் திறக்கக்கூடாது, எந்த மணிக்குப் பிறகு திறந்துவைத்திருக்கக் கூடாதென்று சர்க்கார் உத்திரவு பிறப்பித்திருக்கின்றது. ("வக்கீல்" ஜூன் இதழ் 21, 22 பக்கங்களில் பார்க்கவும்.) இப்பொழுது இந்த திறந்து மூடும் நேர விதியிலிருந்து அடியில் கண்ட ஸ்தாபனங்களுக்கு சர்க்கார் விதிவிலக்கு அளித்திருக்கின்றது. ஷாப் சட்டத்தின் மற்ற விதிகளுக்கு விரோதமன்னியில் கீழ்க்கண்ட கடை முதலிய ஸ்தாபனங்கள் எந்த நேரத்திலும் திறந்து மூடப்படலாம்: (1) பெட்ரோல் பங்குகள் (2) மருந்துக் கடைகள் (3) ரயில்வே ஸ்டேஷன், பஸ் ஸ்டாண்டுகள், சினிமா, டிராமாக் கொட்டகைகள், பொதுஜன வேடிக்கைக்காக உள்ள ஸ்தலங்கள், இவைகளிலிருந்து 100 கெஜத்திற்குள் இருக்கும் கடைகளும், ஹோட்டல் காபி கிளப்புக்களும் (4) காய்கறி மார்க்கெட்டுகளுக்குள் இருக்கும் கடைகள் (5) மோட்டார் போக்குவரத்து ஸ்தாபனங்கள் (6) வியாபார ஸ்தாபனங்களின் கப்பல் ஏற்றுமதி இறக்குமதி இலாகா (7) வியாபார ஸ்தாபனங்களில் தினசரி ரொக்கக் கணக்கு பதிவு செய்யவேண்டிய இலாக்காக்கள்.

(குறிப்பு: பஸ் ஸ்டாண்டுகளும், காய்கறி மார்க்கெட்டுகளும் ஒரு ஸ்தல ஸ்தாபனத்தின் அதிகாரத்திற்குட்பட்டவையாக இருக்கவேண்டும்.)

பாபுலர் பிஸ்கட் பாக்டரி

உயர்தரமான பிஸ்கட், கேக் தயாரிப்பவர்கள்

உரிமையாளர்: A. சாரங்கபாணி (டைமெண்ட் சினிமாவுக்கெதிர்) கும்பகோணம்.

உலையில்

(இப்பகுதியில் காணப்படுபவை இன்னும் சட்டமாகவில்லை)

சென்னை விவசாய (அபிவிருத்தி) மசோதா

R. கிருஷ்ணமூர்த்தி B. A., B. L.,

இச்சட்டம் செய்யும் நோக்கம் : நாட்டின் பொது நலனுக்காக எவ்வளவு உணவுப் பொருள்களும் விவசாயப் பொருள்களும் தேவையோ அவ்வளவு உற்பத்தி செய்ய இயலும்படி திறமை வாய்ந்த ஒரு விவசாயத் தொழிலை இம்மாகாணத்தில் ஏற்படுத்தும் நோக்கத்துடன் சென்னை அரசாங்கம் கீழ்க்கண்ட மசோதாவைத் தயாரித்து பொது ஜன அபிப்பிராயத்திற்கு விட்டிருக்கிறது. இம்மசோதாவைப்பற்றிய ஆட்சேபனைகளையும் ஆலோசனைகளையும் 1—11—1949-க்கு முன் சென்னை சர்க்கார் உணவு இலாகா காரியதரிசிக்கு அனுப்பலாம்.

விவசாயப் பொருள் விற்பனைக்கும், நிர்ணயம் செய்யப்பட்ட விலைக்கும் சர்க்கார் உத்திரவாதம் : நெல், சோளம், கேழ்வரகு, தினை, கம்பு, கோதுமை, துவரை, பச்சைப் பயறு, உளுந்து, நிலக்கடலை, எள்ளு, உருளைக்கிழங்கு, கருப்பு, பருத்தி ஆகிய 14 பொருள்களை உற்பத்தி செய்யும்படி விவசாயிகளைத் தூண்டுவதற்காக சர்க்கார் எல்லா விஷயங்களையும் நன்கு ஆராய்ந்து பார்த்து அப்பொருள்களின் விலையை நிர்ணயம் செய்வார்கள். அதை சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்வார்கள். ஒரு வருடத்திற்கு குறையாத காலத்திற்கு அதே விலை அமுலில் இருக்கும். மேற்கண்ட பொருள்களை உற்பத்தி செய்யும் விவசாயிகள் தங்கள் பொருள் விற்பனையாகுமோ ஆகாதோ என்றும் விலை குறைந்து விடுமோ என்றும் பயப்படவேண்டியதில்லை. இவை இரண்டுக்கும் அதாவது (1) விற்பனை ஆகுவதற்கும் (2) நிர்ணயம் செய்யப்படும் விலை கிடைக்கவும் சர்க்காரே உத்திரவாதம் அளிப்பார்கள். அதை நம்பி விவசாயிகள் மேற்கண்ட பொருள்களை உற்பத்தி செய்யலாம். சர்க்கார் அப்பொருள்களை தாங்களே நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு வாங்கலாம்; அதே விலைக்கு வாங்க வேறு எவருக்கும் எந்த ஸ்தாபனத்திற்கும் அதிகாரமளிக்கலாம்; அல்லது அதே விலைக்கு அப்பொருள்கள் வேறு விதமாக விற்பனையாக ஏற்பாடுகள் செய்யலாம்.

நிலங்களின் சொந்தக்காரர், குத்தகைதார் இவர்கள் கடமை : தேச நலத்தை உத்தேசித்து இம்மாகாணத்தில் எந்த எந்த விவசாயப் பொருள்கள் உற்பத்தி செய்வது அவசியம் என்று சர்க்கார் கருதுகிறதோ அப்பொருள்களின் ஜாபிதாவை சர்க்கார் அவ்வப்பொழுது கெஜட்டில் பிரசுரம் செய்யலாம். மேலும் எந்த பிரதேசத்திலும் அல்லது எவ்வகைப்பட்ட நிலங்களிலும் மேற்கண்ட ஜாபிதா பொருள்களைத் தவிர வேறு பொருள்களை பயிரிடக் கூடாதென்று சர்க்கார் கெஜட் விளம்பரத்தின் மூலம் தடுக்கலாம். இது விஷயமாய் சர்க்காரால் அதிகாரம் கொடுக்கப்பட்ட அதிகாரிகள் கீழ்க்கண்டபடி உத்திரவுகள் செய்யலாம். (1) சாகுபடியாகாமல் தரிசாக இருக்கும் எந்த நிலத்தையும் சாகுபடிக்கு கொண்டுவரும்படியும் (2) எந்த நிலத்தில் என்ன பயிர் செய்யவேண்டுமென்றும் அல்லது எந்த நிலத்தை எப்படி உபயோகப் படுத்த வேண்டுமென்றும் (3) அதற்கு அவசியமான எந்த மராமத்து வேலையைச் செய்யவேண்டுமென்றும் (4) குறிப்பிட்ட இடங்களில் மேய்ச்சலுக்கு புல் பயிராகும்படி வைக்கவேண்டுமென்றும் (5) பரீட்சை செய்யப்படாத விதைகளை உபயோகிக்கக் கூடாதென்றும் (6) வேறு எக்காரியத்தையும் (இச்சட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்ற) செய்யும்படிக்கும் உத்திரவுகள் பிறப்பிக்கலாம்.

விவசாய 'சூப்ரவைசர்கள்' நியமிக்கப்படுவார்கள்: விவசாய இலாகாவிலிருந்து பொருக்கி விவசாய சூப்ரவைசர்கள் என்ற அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள். இந்த அதிகாரி தன் எல்லைக்குள் உள்ள விவசாயிகள் தங்கள் பொறுப்பை சரிவர நிறை

வேற்றி வருகின்றனரா என்று மேல் விசாரணை செய்வார். எந்த விவசாயி இச்சட்டப்படிக்குள்ள கடமைகளை செய்யத்தவறினுலும் எந்த இடங்களில் விவசாயத்தில் குறைபாடுகள் இருந்தாலும் இவைகளை ஜில்லா கலெக்டருக்கு தெரிவிப்பதுடன் அது சம்பந்தமாய்த் தன்னுடைய யோசனைகளையும் ஜில்லாகலெக்டருக்குசமர்ப்பிப்பார். மேலும் பயிர்கள், மேய்ச்சல் நிலம், உணவு தானியம், கால் நடை, மரங்கள், வேலிகள் குளங்கள் இவைகளுக்கு சேதம் வராமல் தடுப்பதற்காக என்ன செய்யப்பட வேண்டுமோ அதை செய்யும்படி இந்த விவசாய சூப்ரவைசர் எவருக்கும் எழுத்து மூலம் உத்திரவு செய்யலாம். உத்திரவில் கண்ட எந்த மிருகங்கள் பட்சிகள் இவைகளை கொல்லும்படிக்கும் முட்டைகளை அழிக்கும்படிக்கும் உத்திரவு செய்யலாம். நிலத்தின் சொந்தக்காரரும் குத்தகைதாரும் தம் வசமுள்ள நிலங்களில் உயர்ந்த தரமுள்ள பொருள்கள் அதிக விளைச்சலுடன் மகசூலிருக்கும்படி நிர்வகிக்க வேண்டும். முக்கியமாக அவர்கள் (1) சாகுபடி செய்யக்கூடிய நிலத்தை தரிசு போடாமலும் (2) சாகுபடி நிலங்களை செழிப்புள்ளதாக வைத்துக் கொண்டும் (3) பயிர்களையும் கால் நடைகளையும் வியாதிக்குள்ளாகாமல் பார்த்துக் கொண்டும் (4) பயிர்களை பாதுகாத்தும் காலா காலத்தில் அறுவடை செய்தும் (5) அவர்கள் செய்யவேண்டிய மராமத்து வேலைகளைச் செய்து கொண்டும் (6) இது விஷயமாய் ஏற்படும் விதிகளை அனுசரித்து பயிர்களை மாற்றியும் (7) இச்சட்டப்படி அதிகாரிகள் செய்யச் சொல்லும் விஷயங்களை செய்தும் வரவேண்டியது அவர்கள் கடமையாகும்.

சொந்தக்காரரிடமிருந்து நிலங்களை கலெக்டர் மாற்றலாம்: விவசாய சூப்ரவைசரின் ரிபோர்ட்டின் பேரிலோ வேறு விதமாகவோ எந்த நிலமாவது சரிவர பராமரிக்கப்படவில்லை என்று கலெக்டருக்குத் தோன்றினல் அவர் அந்த நிலத்தின் சொந்தக்காரருக்கு நோட்டீஸ் அனுப்பி அவருடைய ஆட்சேபனைகளைக் கேட்டு (1) அந்த நிலத்தைத் திறமையாக மானேஜ்மெண்ட் செய்யக்கூடிய வேறு ஒருவருக்கு குறிப்பிட்ட காலத்துக்கு மானேஜ்மெண்ட் செய்யும்படி ஒப்படைக்கலாம். (2) அல்லது சொந்தக்காரரே எந்த எந்த வேலைகளைச் செய்யவேண்டுமென்று உத்திரவிடலாம். (3) அல்லது வேறு எவ்விதமாக விவசாய விளைப் பொருள் உற்பத்திக்காக உபயோகப்படுத்தவேண்டுமென்றும் உத்திரவிடலாம். புதிதாய் மானேஜ்மெண்ட் செய்ய நியமிக்கப்பட்டவருக்கு எவ்வளவு ஊதியம் கொடுக்கப்படுமென்று கலெக்டரால் நிர்ணயிக்கப்படும். மராமத்து வேலைக்கான செலவுகள் சொந்தக்காரரிடமிருந்து வரிபாக்கி போல் வசூலிக்கப்படும்.

அவ்விதமே கலெக்டர் குத்தகைதாரர்களையும் மாற்றலாம்: ஒரு நிலத்தின் குத்தகைதாரர் நிலத்தை சரிவர சாகுபடி செய்யவில்லை என்று விவசாய சூப்ரவைசரின் ரிபோர்ட்டின்பேரிலோ வேறு விதமாகவோ கலெக்டருக்குத் தெரியவந்தால் அவர் அக்குத்தகைதாருக்கு நோட்டீஸ் அனுப்பி ஆட்சேபனை கேட்டு (1) குத்தகைதாருடைய குத்தகையை (என்ன கெடு பாக்கி இருந்தபோதிலும்) ரத்து செய்யலாம் (2) அந்நிலத்தை சொந்தக்காரர் நேரிலோ வேறு குத்தகைக்குவிட்டோ பயிர்செய்யும்படி உத்திரவிடலாம் (3) அவர் அப்படிச் செய்யாவிட்டால் கலெக்டருக்கு யுக்தமாய்த் தோன்றும் நபருக்கு குத்தகைக்கே விடலாம். இவ்விதம் குத்தகை ரத்து செய்யப்பட்டால் குத்தகைதாரர் நிலத்தில் என்ன அபிவிருத்தி செய்திருந்த போதிலும் அவருக்கு யாதொரு நஷ்ட ஈடும் கிடைக்காது. புதிதாய் கலெக்டரால் குத்தகைக்கு விடப்பட்டால் புது குத்தகைதாரர் கொடுக்கவேண்டிய குத்தகையை நேரில் சொந்தக்காரருக்கே கொடுக்கக் கடமைப்பட்டவர்.

தரிசு நிலங்களையும் கலெக்டர் இஷ்டப்படி குத்தகைக்கு விடலாம்: நிலத்தை தரிசு போட்டால் நிலத்தின் சொந்தக்காரருக்கு கலெக்டர் நோட்டீஸ் அனுப்பி குறிப்பிட்ட காலத்திற்குள் அதை சாகுபடிக்கு கொண்டு வரவேண்டுமென்று உத்திரவு செய்யலாம். அவர் அப்படிச் செய்யாவிட்டால் அந்த நிலத்தை கலெக்டருக்கு யுக்தமாய்த்

(தொடர்ச்சி 25-ம் பக்கம் பார்க்கவும்)

கேள்வியும் - பதிலும்

இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்குமட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக் கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்க வேண்டும். கேள்விகள் சுருக்கமாய் இருக்கவேண்டும்; கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் அபிப்பிராயமே.

கேள்வி: பலதாரத்தடைச் சட்டத்தில், தம்பதிகள் விவாகமாகி பல வருடங்களாகியும் குழந்தையில்லாமலிருக்கும் நிலைமையில் கணவன் வேறு பெண்ணை மணந்து கொள்ளலாமா? முதல் மனைவி சம்மதம் கொடுத்தால் கணவன் வேறு பெண்ணை மணந்து கொள்ளலாமா?

பதில்: ஒரு மனைவி உயிருடன் இருக்கும்பொழுது எந்த சந்தர்ப்பத்திலும் கணவன் வேறு மணம் செய்து கொள்ள முடியாது. முதல் மனைவி சம்மதித்தாலும் முடியாது. விவாகத்தை ரத்து செய்து கொண்டவர்கள்தான் மறு விவாகம் செய்து கொள்ளலாம்.

கேள்வி: வீட்டு வாடகை எவ்வளவு ரூபாய்க்கு மேல் வந்தால் வருமான வரி கொடுக்கவேண்டும்?

பதில்: வீட்டு வாடகை உள்பட போன வருட மொத்த வருமானம் ரூ. 3000/-க்கு மேல் இருந்தால் இந்த வருடம் (1949-50) வருமான வரி (இன்கம் டாக்ஸ்) உண்டு. அவிபக்த ஹிந்து குடும்பத்திற்கு போன வருட வருமானம் ரூ. 5000 வரை (சில நிபந்தனைகளுக்குட்பட்டு) வருமான வரி கிடையாது.

கேள்வி: கைத்தறி ஜவுளிகளை ஒரு வியாபாரி வேறு மாகாணங்களுக்கு விற்றால் விற்பனை வரி உண்டா?

பதில்: வியாபாரி அதற்காக லைசென்சு பெற்றிருந்து விற்கப்படும் கைத்தறி ஜவுளியும் அனுப்பப்பட்டு விட்டால் விற்பனை வரி கிடையாது. விற்பனை வரிச் சட்டம் செக்ஷன் 5 (iii).

கேள்வி: ஏலக்கூட்டுச் சீட்டு நடத்த ஏதாவது லைசென்சு வாங்க வேண்டுமா?

பதில்: வேண்டியதில்லை. ஆனால் ஏலக்கூட்டுச் சீட்டு நடத்துபவர்கள் ஒரு முக்கிய விஷயத்தை கவனிக்கவேண்டும். அதாவது: 20 நபர்களுக்கு மேல் கூட்டாகச் சேர்ந்து லாபம் சம்பாதிக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் எந்தத் தொழில் நடத்தினாலும் இந்திய கம்பெனிச் சட்டப்படி அக்கூட்டு "கம்பெனி"யாக ரிஜிஸ்டராகி இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அது சட்ட விரோதமான கூட்டு ஆகும். அதன் நடவடிக்கைகள் செல்லாது. கூட்டுச்சீட்டில் 20 நபர்களுக்கு மேல் இருக்கலாம். அதில் மானேஜருடன் மட்டில் மற்ற மெம்பர்கள் தனித் தனி ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தால் பாதகமில்லை. ஏனென்றால் அது எல்லா மெம்பர்களும் சேர்ந்து நடத்தும் கூட்டுத் தொழிலாகாது. இதில் ஒவ்வொரு மெம்பருக்கும் மானேஜர் ஒருவர்தான் ஜவாப்தாரி. ஆனால் அப்படிக்கில்லாமல் 20-க்கு மேற்பட்ட மெம்பர்கள் ஒருவருக்கொருவர் தொடர்பு இருக்கும்படி ஒப்பந்தம் செய்து கொண்டு கூட்டுச் சீட்டு நடத்தினால் அவர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு தொழில் நடத்துவதாக ஆகும். இது "கம்பெனி" ஆக ரிஜிஸ்டராகாவிட்டால் சட்ட விரோதமாகும்.

சென்னை விவசாய (அபிவிருத்தி) மசோதா

(23-ம் பக்கத் தொடர்ச்சி)

தோன்றும் நபருக்கு குறிப்பிட்ட காலத்திற்கு குத்தகைக்கு விடலாம். குத்தகைதார் சர்க்காருக்கு கிஸ்தியும் நிலக்காரருக்கு குத்தகையும் கொடுக்கவேண்டும். அவரை நிலத்தை விட்டு அகற்றும் காலத்தில் அவரால் செய்யப்பட்டிருக்கும் அபிவிருத்திக்கு நஷ்ட ஈடும் கொடுக்கவேண்டும். தன் உத்திரவுகளை நிறைவேற்ற கலெக்டருக்கு சகல அதிகாரமும் இருக்கும்.

நிலத்தையே சர்க்கார் கட்டாய கிரயத்திற்கு அல்லது குத்தகைக்கு எடுத்துக் கொள்ளலாம்: தரிசு நிலங்களையும் சீர்கேடாக பயிர் செய்யப்படும் நிலங்களையும் சொந்தக்காரரிடமிருந்து கட்டாயக் கிரயத்துக்கு எடுத்துக் கொள்ளவும் குத்தகைக்கு எடுத்துக் கொள்ளவும் அதிகாரமுண்டு. அப்படி எடுத்துக் கொள்ளப்படும் நிலங்களை சரிவர சாகுபடி செய்ய வேறு நிலங்கள் தேவையாக இருந்தாலும் அவைகளையும் அப்படியே கட்டாயக் கிரயத்துக்கோ குத்தகைக்கோ எடுத்துக் கொள்ளலாம்.

49 ஏக்கருக்குமேல் நிலமுள்ள சொந்தக்காரருக்கு சர்க்கார் உத்திரவு பிறப்பித்து அவர்கள் நிலங்களில் முன் வருடத்தில் தரிசாக இருந்த நிலங்களை தாமாகவோ குத்தகைக்கு விட்டோ சாகுபடி செய்யும்படி பின்வருமாறு கட்டாயப்படுத்தலாம், அதாவது 100 ஏக்கர்களுக்குள் நிலமுள்ளவரை தரிசு நிலத்தில் 10 சத விகிதமும், அதற்கு மேல் நிலமுள்ளவரை 20 சத விகிதமும் ஒருவருடத்தில் சாகுபடி செய்யும்படி கட்டாயப்படுத்தலாம். ஆனால், இந்த விதியிலிருந்து தன்னை விலக்கும்படி எந்த நிலத்தின் சொந்தக்காரரும் ஏப்ரல் 1-ம் தேதிக்கு முன் விவசாய சூபர்வைசருக்கு மனுப்போடலாம். அந்த தரிசுநிலங்கள் மேய்ச்சலுக்குத் தேவை என்றாவது, ஹரியாலி நிறைந்திருக்கிறதென்றாவது, பூமி சாரமற்றதென்றாவது, சாகுபடிக்கு கொண்டுவரவே முடியாதென்றாவது தோன்றினால் அவர் விதிவிலக்கு அளிக்கலாம். அப்படி யாதொரு காரணமுமில்லாவிட்டாலும் அல்லது சொந்தக்காரர் கேட்டுக் கொண்டாலும் அந்தத் தரிசு நிலங்களை கலெக்டர் 5 வருடத்திற்கு மேற்படாத குத்தகைக்கு விடலாம். முதல் 3 வருடத்திற்கு சர்க்கார் தீர்வை எவ்வளவோ அதுவேதான் குத்தகையாகவும் அடுத்த இரண்டு வருடத்திற்கு அதைப்போல் இரண்டுமடங்கு குத்தகையாகவும் இருக்கும்.

விவசாய அபிவிருத்தி போர்டுகள்: விவசாய அபிவிருத்தி போர்டு விவசாய அபிவிருத்திகளில் அக்கரைகொண்ட அங்கத்தினர்களைக் கொண்டதாக இருக்கும். இவை அரசாங்கத்தால் நியமிக்கப்படும். போர்டுகளில் எத்தனை அங்கத்தினர்கள், எந்த இடங்களில் அவை அதிகாரம் செலுத்தும், எவ்வளவு காலத்திற்கு போர்டு வேலை செய்யும் என்பவற்றை சர்க்கார் தீர்மானம் செய்வார்கள். ஷை போர்டுகளுக்கென்று இச்சட்டத்தில் விதிக்கப்பட்ட வேலைகளைச் செய்ய ஷை போர்டுகள் அரசாங்கத்தின் ஏஜண்டாக இருக்கும்.

அரசாங்கம் தமக்குச் சொந்தமானதும், தம்மால் வசப்படுத்தப்பட்டதுமான எந்த நிலத்தையும் நிர்வகிக்கும் பொருட்டு ஷை போர்டுக்குக் கொடுத்து நடைமுதல் செலவுகளுக்காக உசிதம் என்று தோன்றிய நிதியையும் போர்டுக்கு அளிக்கும்.

ஷை போர்டுகள் (1) அரசாங்கத்தால் அவர்களுக்கு இடப்படும் உத்திரவுகளை நிறைவேற்றுவதும் (2) அவைகளின் வசமுள்ள நிலத்திற்குத் தேவையான அபிவிருத்திகளைச் செய்வதும் (3) தம் வசமுள்ள நிலங்களை அவசியமானால் குத்தகைக்கு விடவும் (4) சொந்தக்காரர் ஆஜரில்லாததினாலோ, சக்தியில்லாததினாலோ, அசட்டையினாலோ தரிசாகக் கிடக்கும் நிலங்களை சாகுபடி செய்வதும் (5) மண்ணின் சாரத்தைப் பாதுகாப்பது, விருத்தி செய்வது பூமி அரிக்கப்படாமல் பாதுகாத்தல், நீர்பாசன வசதிகளை சீர்திருத்தல், சாகுபடி முறைகளை விருத்திச் செய்தல், புஞ்சை சாகுபடி முறையை சீர்ப்படுத்தல், நல்ல விதைகள், சீர்திருத்தப்பட்ட விவசாயக் கருவிகள், எரு இவைகளை அளித்தல், தோட்ட விருத்தி செய்தல், பல விருக்ஷங்

கள் பயிராக்கல், பாழான நிலங்களை உபயோகத்திற்கு கொண்டு வருதல், மேய்ச்சல் வசதிகளைப் பராமரித்தல், மரங்கள் செடிகள் வளர்ச்சியை நிர்வகித்தல், தாவரங்களைக் கொளுத்துவதைக் கண்காணித்தல், சாகுபடிக்கு லாயக்கில்லாத நிலங்களில் மரம், செடி, புல் வளர்த்து காற்று மணல் இவைகளினின்றும் பாதுகாப்பளித்தல் நோய்கள், பூச்சி முதலியவைகளினின்றும் பாதுகாத்தல். இது போன்ற மாகாண விவசாய தேவைகளையனுசரித்து தம் வசமிருக்கும் நிலங்களை சாகுபடி செய்தல். இவ்விதம் விவசாய போர்டுகளுக்கு இன்னும் சில அதிகாரங்களும் உண்டு.

குற்றங்களும் தண்டனைகளும்: யாதொரு நபர் அரசாங்கத்தாராலோ அல்லது அதன் உத்தியோகஸ்தர்களாலோ இச்சட்டத்தின் படி விதிக்கப்பட்ட உத்திரவுகளை மீறுகிறாரோ அல்லது உடன்படாமலிருக்கிறாரோ அவருக்கு 100 ரூபாய் வரையில் அபராதம் விதிக்கலாம்.

கிராமக் கணக்கில் தமது பேரில் தரிசாக குறிப்பிட்டிருக்கும் நிலங்களைச் சாகுபடி செய்வது சம்பந்தமான உத்திரவுப்படி நடக்காத எந்தக் கைப்பற்று நிலக்காரரையும் சாகுபடிக்குக் கொண்டுவரவேண்டிய விஸ்தீர்ணத்திற்கு ஏகர் 1-க்கு ரூ. 50 வீதம் அபராதம் விதிக்கலாம்.

மேற்கூறிய அபராதத்தைத் தவிர ஷை விதியின்படி உத்திரவிடும் எந்த உத்தியோகஸ்தரும், நிலத்தில் பிரவேசித்து ஷை உத்திரவில் கண்ட வேலைகளைச் செய்ய ஏற்பாடு செய்யலாம். அவ்வேலைகளைச் செய்வதற்கான செலவுகளை ஷை உத்திரவிடப்பட்ட நபரிடமிருந்து நிலவரி பாக்கி வசூல் செய்யும் முறையில் வசூலிக்கப்படும்.

இந்த சட்டப்படி நடவடிக்கையெடுத்துக்கொள்ளும் எந்த உத்தியோகஸ்தரையும் தடுக்கும் எந்த நபருக்கும் ரூ. 100 வரையில் அபராதம் விதிக்கப்படும்.

அரசாங்கம் தம் வசமிருக்கும் நிலங்களை எந்த நபருக்கும் கொடுக்கும் அதிகாரத்தை வரையறுக்க இச்சட்டத்தில் யாதுமில்லை.

கலியாண
காலத்திற்கேற்ற
பட்டுச் சேலைகள்

துண்டுப் பாவாடைகள், ரவிக்கைத் துண்டுகள், உங்களுக்குப் பிடித்த பல தினுசுகளிலும் கலர்களிலும் ஸ்டாக் செய்துள்ளோம்.

ருக்மணி ஸில்க் - -
- - எம்போரியம்

பெரிய தெரு, :: கும்பகோணம்.

Tel. "ROYAL"

உயர்ந்த பிளேசர் பட்டு உத்திரவாதமுள்ள ஜரிகை, பலரக கலர்கள்-உடை நயம் நாகரீக பல பார்டர் தினுசுகள் 6, 7, 8, 9, கெஜங்களில் ஸ்டாக் செய்திருக்கிறோம்.

ஒரே விலை விற்பனை

K. T. A. K. L.

பாலகிருஷ்ணையர்

பட்டு ஜவுளி வியாபாரம்

8, சௌராஷ்டிர பெரியதெரு,

கும்பகோணம்.

Printed by DR. V. R. MURTY at the Homoeopathy Press, Banadurai, Kumbakonam.
Edited and Published by M. R. RAJAGOPALAN at No. 48, Kalyanaraman Street, Kumbakonam.

கல்யாண ஸீஸனுக்கென்றே புதுப்புது டிஸைன்

பெங்களூர், காஞ்சீவரம், கும்பகோணம்

பட்டுச் சேலைகள்

ஏராளமாக ஸ்டாக் செய்திருக்கிறோம். தேவைக்கு உடனே முந்துங்கள்.

ரெங்கமூர்த்தி கம்பெனி

கெருடலாயத் தெரு, :: கும்பகோணம்.

பிராஞ்சுகள் :—மே. மே. வீதி, காரைக்குடி & நாட்டரசன்கோட்டை.

சாயத்திற்கு உத்திரவாதமுள்ள
அற்புத கலர்களில் கவர்ச்சி செய்யும் பார்டர்கள்
முந்திகள் அமைந்த எமது சொந்த கை நெசவு
ஜரிகை பட்டு & நூல் சேலைகள்

வேண்டியவற்றிற்கு ஆர்டர் கொடுங்கள்.

பிரிட்டிஷ் எம்பயர் எக்ஸிபிஷனில் மெடல் சர்டிபிகேட் பெற்ற

ராணி ரெங்கய்யர் ஸன்ஸ்

பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்

கெருடலாயத் தெரு — கும்பகோணம்

கிளை : 20, லெக்ஷிமிபுரம் 2-வது தெரு, மதுரை.

Regd. No. M. 5399

V. S. & Sons

SWEETS

குணத்திலும்
மணத்திலும்
நிகரற்றது

வி. எஸ். & ஸன்ஸ்

பெப்பர்மெண்டுகள்

தயாரிப்பவர்கள் :

தென் இந்திய பெப்பர்மெண்டு தொழிற்சாலை

கும்பகோணம்

(Estd. 1925)

ஹோமியோபதி பிரஸ், கும்பகோணம்.